# TNPSC GROUP II/IIA TEST BATCH 2025
# HOME TEST – பொதுத்தமிழ்

## பொதுத்தமிழ் - அலகு 1

1. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைக் கண்டறிக.
பரவை பறவை
a. பரவுதல் - பறத்தல்
b. ஆழி - இறகு
c. பரப்புதல் - பெயர்ச்சொல்
d. கடல் - புள்

2. கொடுக்கப்பட்ட வேர்ச் சொல்லின் வினையாலணையும் பெயரைக் கண்டறிக.
கொடு
a. கொடுத்தான் b. கொடு c. கொடுத்தோர் d. கொடுத்து

3. பின்வருவனற்றுள் ஏவல் வினைமுற்றுச் சொல் எது?
a. செல்க b. ஓடு c. வாழிய d. வாழ்க

4. பிரித்தெழுதுக:
பொய்யகற்றும் - பிரித்தெழுதுக
a. பொய் + அகற்றும் b. பொய் + கற்றும்
c. பொய்ய + கற்றும் d. பொய் + யகற்றும்

5. பார்-என்னும் வேர்ச்சொல்லின் பெயரெச்ச வடிவம் தருக.
a. பார்த்து b. பார்த்த c. பார்த்தான் d. பார்த்தது

6. பின்வரும் வினைகளின் பொருள் வேறுபாடு அறிக.
விரிந்து விரித்து
a. மயில் தோகையை விரித்ததால் பூக்கள் விரிந்தன.
b. காற்று வீசியதால் பூவின் இதழ்கள் விரிந்தன. மயில் தோகையை விரித்தது.
c. பூக்கள் விரிந்ததால் மயில்கள் ஆடின
d. காற்று வீசியது, பூக்கள் விரிந்தன.

7. வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயர் காண்க - பாடு
a. பாடுதல் b. பாடுக c. பாடிய d. பாடியவள்

8. வேர்ச்சொல்லைக் கொடுத்து வினைமுற்று உருவாக்கல்
கேள்
a. கேட்ட b. கேட்டு c. கேட்டான் d. கேட்கிற

9. பிரித்து எழுதுக
‘நீளுழைப்பு’ – என்னும் சொல்லைப் பிரித்து எழுதுக் கிடைப்பது
a. நீளு + உழைப்பு
b. நீண் + உழைப்பு
c. நீண்ட + உழைப்பு
d. நீள் + உழைப்பு

10. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க.
அன்னம் -அண்ணம்
a. சோறு - பல்
b. உணவு - உதடு
c. பறவை - மேல்வாய்
d. காகம் - கீழ்வாய்

11. ‘மருண்டு’’ - இச்சொல்லின் வேர்ச்சொல்லை காண்க.
a. மருண்
b. மருட்டு
c. மருல்
d. மருள்

12. பிரித்து எழுதுக: கொங்கலர்தார்
a. கொங்கலர் + தார்
b. கொ + கலர்தார்
c. கொங்கு + அலர் + தார்
d. கொங்க + அலர்தார்

13. ஒண்ணகர் - பிரித்து எழுதுக.
a. ஒருமை + நகர்
b. ஒண் + நகர்
c. ஒண்மை + நகர்
d. ஒ + நகர்

14. தெண்ணீர் - பிரித்து எழுதுக.
a. தெண்மை + நீர்
b. தெ + நீர்
c. தெள் + நீர்
d. தேன் + நீர்

15. செய் - என்னும் வேர்ச் சொல்லின் வினையாலணையும் பெயரைத் தேர்ந்தெடு:
a. செய்தீர்
b. செய்வாய்
c. செய்தவன்
d. செய்தான்

16. வேர்ச்சொல் தேர்க:
பற்றுக பற்றற்றான் பற்றினை: அப்பபற்றைப்
பற்றுக பற்று விடற்கு
a. பற்றுக
b. பற்றற்றான்
c. பற்றி
d. பற்று

17. பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பி தேரினும் அ∴தே துணை – கீழ்க்காணும் சொற்களுள் எதிர்ச்சொல்லைக் கண்டறிக:
a. பரிந்து × வெறுத்து
b. பரிந்து × விரும்பி
c. தெரிந்து × உணர்ந்து
d. தெரிந்து × ஆராய்ந்து

18. பிரித்தெழுதுக: நெடுநாவாய்
a. நெடு + நாவாய்
b. நெடுமை + நா + வாய்
c. நெடுமை + நாவாய்
d. நெடுநா + வாய்

19. தெரிநிலை வினையெச்சத்தை எடுத்து எழுதுக:
a. நோயின்றி வாழ்கிறான்
b. மெல்ல நடந்தான்
c. நடந்து வந்தான்
d. நன்கு பாடினான்

20. சந்திப்பிழை இல்லாதத் தொடரைக் கண்டறிக:
a. ஆசிரியர் பெயரை தம் பெயருடன் சேர்த்து பீமாராவ் அம்பேத்கராக மாறினார்.
b. ஏழைகளுக்கு பொருள் பெறாமல் வாதாடி நீதி பெற்று தந்தார் அம்பேத்கர்.
c. இலட்சியக் கனவுகளை அறிவுத்திறத்தினால் உறுதிப்படுத்தியவர் அம்பேத்கர்.
d. சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட மக்களுக்காக தன்னை அர்பணித்துக் கொண்டவர் அம்பேத்கர்.

21. ‘படிப்பித்தார்’ என்ற சொல்லின் வேர்ச்சொல்லைக் காண்க.
a. படித்த b. படிப்பி c. படித்தல் d. படி

22. இவற்றுள் முற்றெச்சத்தை எடுத்து எழுதுக:
a. கண்ணன் உறங்கினான் விழித்தான் b. கண்ணன் விழித்து எழுந்தான்
c. கண்ணன் எழுந்து படித்தான் d. கண்ணன் படித்து முடித்தான்

23. வினைத்தொகை
1. சென்னிழல் 2. செந்நிழல்
3. சூழ் கடல் 4. உகுநீர்
a. 1, 2, 3, 4 – சரியானவை b. 1, 3, 4 – சரி, 2 – தவறு
c. 1, 2 – தவறு, 3, 4 – சரி d. 2, 3, 4 – சரி, 1 – தவறு

24. சந்திப்பிழை இல்லாத தொடரைத் தேர்க:
a. சங்க காலத்தில் இசைத் தமிழ் சீரும் சிறப்பு முற்றுத் திகழ்ந்தது.
b. சங்கக் காலத்தில் இசைத்தமிழ் சீரும் சிறப்பு முற்றுத் திகழ்ந்தது.
c. சங்க காலத்தில் இசை தமிழ் சீரும் சிறப்பு முற்றுத் திகழ்ந்தது.
d. சங்க காலத்தில் இசைத்தமிழ் சீரும் சிறப்பு முற்று திகழ்நதது.

25. பின்வருவனவற்றுள் பொருத்தமான இணையைக் கண்டெடு:

| வெற்பு | | வெட்பு |
|---|---|---|
| a. கல் | - | சும்மா |
| b. மலை | - | சூடு |
| c. நோய் | - | மலை |
| d. வெறுப்பு | - | விருப்பு |

26. நில் - என்னும் வேர்ச்சொல்லின் தொழிற் பெயரைத் தேர்ந்தெடு:
a. நின்று b. நின்ற c. நிற்க d. நிற்றல்

27. பிறமொழிச் சொல்லற்ற தொடர் எது?
a. பெற்றோர் ஆசிரியர் கழகத்தில் மாணவர்கள் அங்கத்தினர்
b. தேர்வு நேரத்தில் அந்நியர் யாரும் நுழையக் கூடாது
c. அலுவலகத்தில் உத்தரவு பெற்று உள்ளே வர வேண்டும்
d. அலுவலகத்தில் கையூட்டு வாங்கக் கூடாது

28. பட்டியல் I ஐ பட்டியல் II இல் பொருத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடுக்க

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| A. ஊண் | 1. மகிழ்வு |
| B. ஊன் | 2. சனி |
| C. கலி | 3. உணவு |
| D. களி | 4. இறைச்சி |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 2 | 1 |
| b. | 4 | 3 | 1 | 2 |
| c. | 3 | 4 | 2 | 1 |
| d. | 4 | 3 | 2 | 1 |

29. பொருத்துக

A. நடந்தான் — 1. தொழிற்பெயர்
B. நடந்த — 2. வினையெச்சம்
C. நடந்து — 3. பெயரெச்சம்
D. நடத்தல் — 4. வினைமுற்று

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 2 | 1 |
| b | 2 | 3 | 1 | 4 |
| c. | 3 | 4 | 1 | 2 |
| d. | 4 | 2 | 3 | 1 |

30. பிரித்தெழுதுக
பரித்தியாகம்
a. பரித்து + யாகம்
b. பரித்தி + யாகம்
c. பரி + தியாகம்
d. பரிதி + யாகம்

31. கீழ்க்காணும் 'வல்லினம் மிகா இடம்' குறித்த இலக்கணக் கூற்றில் பிழையான கூற்று எது?
a. வினைத்தொகையில் வல்லினம் மிகாது
b. உம்மைத்தொகையில் வல்லினம் மிகாது
c. இரண்டாம் வேற்றுமைத்தொகையில் வல்லினம் மிகாது
d. நான்காம் வேற்றுமை விரியில் வரும் வல்லினம் மிகாது

32. சந்திப்பிழை இல்லாத தொடரைக் கண்டறிக?
a. திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளி ஒலிப் படக்கருவி பயன்படுகிறது.
b. திரைபடம் மக்களை தன்பால் ஈர்க்கவல்லது.
c. கயிறு கட்டிலில் தன்னை மற்ந்து உறங்கினான்.
d. செய்திபடங்கள் வாயிலாக நிகழ்வுகளை நம் இருப்பிடத்திலேயே கண்டுகளிக்கலாம்.

33. தவறாகப் பிரிக்கப்பட்டுள்ள சொல்லைத் தேர்க.
a. இலக்கியம் - இலக்கு + இயம்
b. செம்மொழி – செம்மை + மொழி
c. தமிழ்நாடு – தமிழ் + நாடு
d. வேரூன்றிய – வேரு + ஊன்றிய

34. ஆங்கிலச் சொற்களுக்கு <u>நேரான</u> தமிழ்ச் சொற்களை அறிக.
இந்த செஞ்சுரி டென்ஷன் நிறைந்தது
a. இந்த நூற்றாண்டு பரபரப்பு நிறைந்தது.
b. இந்த ஆண்டு பதற்றம் நிறைந்தது.
c. இந்த நூற்றாண்டு மனக்கவலை நிறைந்தது.
d. இந்த நூற்றாண்டு மனஅழுத்தம் நிறைந்தது.

35. பொருத்தமில்லாத எதிர்ச்சொல்லைக் கண்டுபிடி
a. தேய்ந்து × வளர்ந்து
b. குழப்பம் × தெளிவு
c. நண்பர் × செறுநர்
d. கரத்தல் × மறைத்தல்

36. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளையறிதல்
வாழை, வாளை, வாலை
a. மரம், மீன், இளம்பெண்
b. மரம், இளம்பெண், மீன்
c. செடி, விலங்கு, மரம்
d. பூ, செடி, விலங்கு

37. பிழையற்ற தொடர் எது
a. கயிறுக் கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்.
b. கயிற்றுக் கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்.
c. கயிறு கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்.
d. கயிற்று கட்டிலில் தன்னை மற்நது உறங்கினான்.

38. 'அவன் உழவன்' – என்பதன் இலக்கணக் குறிப்பு தேர்க:
a. தெரிநிலை வினைமுற்று
b. குறிப்பு வினைமுற்று
c. பெயர்ச்சொல்
d. தொழிற்பெயர்

39. 'பெறு' என்ற வேர்ச்சொல்லின் விணையாலனையும் பெயரைத் தேர்ந்தெடு:
a. பெற்றாள்
b. பெறுவான்
c. பெறுகிறான்
d. பெறுபவன்

40. கொடுக்கப்பட்டுள்ள சொற்களுக்கான இலக்கணக் குறிப்புகளில் வரிசை மாறாத சரியான இணையைத் தேர்வு செய்க
மடக்கொடி – அவ்வூர்
a. அன்மொழித் தொகை, சேய்மைச் சுட்டு
b. பண்புத் தொகை, சேய்மைச் சுட்டு
c. உரிச்சொற்றொடர், அன்மொழித் தொகை
d. வினைத் தொகை, பண்புத் தொகை

41. மா முன் நிரையும் விள முன் நேரும் வருவது
a. வஞ்சித் தளை
b. இயற்சீர் வெண்டளை
c. வெண்சீர் வெண்டளை
d. கலித்தளை

42. ஒலி வேறுபாடறிந்து சரியானப் பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
அறை – அரை என்ற சொல்லின் பொருள் யாது?
a. கட்டடப்பகுதி – ஒன்றில் பாதி
b. காலியானப்பகுதி – கட்டடப்பகுதி
c. ஒரு பொருளின் பாதி – ஓர் அறையின் பகுதி
d. ஒன்றில் பாதி – கட்டடப்பகுதி

43. பட்டியல் ஒன்றுடன், பட்டியல் இரண்டை பொருத்துக

| பட்டியல் ஒன்று | பட்டியல் இரண்டு |
|---|---|
| A. வாலை | 1. புற்று |
| B. உளை | 2. சுரபுன்னை மரம் |
| C. அளை | 3. இளம்பெண் |
| D. வாழை | 4. பிடரிமயிர் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 2 | 1 |
| b. | 2 | 1 | 3 | 4 |
| c. | 1 | 2 | 4 | 3 |
| d. | 3 | 4 | 1 | 2 |

44. பிறமொழிச் சொல்லற்ற தொடர் எது?
a. அவர்களிருவருக்கும் இடையே கான்வர்சேசன் நடந்தது
b. அவர்களிருவருக்கும் இடையே விவாதம் நடந்தது
c. அவர்களிருவருக்கும் இடையே உரையாடல் நடந்தது
d. அவர்களிருவருக்கும் இடையே ஸ்பீச் நடந்தது

45. ‘கொள்’ என்னும் வேர்ச்சொல்லின் வினைமுற்று
a. கொண்டான் b. கொள்க c. கொண்ட d. கொண்டு

46. பின்வருவனவற்றுள் தவறான இணையைச் சுட்டுக:
a. சிறிது × பெரிது b. திண்ணிது × வலிது c. உயர்வு × தாழ்வு d. நன்று × தீது

47. வினைமுற்று, பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகிய இவற்றினைப் பயனிலையாகக் கொண்டு முடிவது?
a. நான்காம் வேற்றுமை
b. இரண்டாம் வேற்றுமை
c. முதல் வேற்றுமை
d. ஆறாம் வேற்றுமை

48. ‘சேர்’ என்னும் வேர்ச்சொல்லின் பெயரெச்சம்
a. சேர்ந்து b. சேர்க c. சேர்ந்த d. சேர்ந்தது

49. ‘தீண்டிற்று’ என்ற வினைமுற்றுச் சொல்லின் வேர்ச்சொல்லைத் தேர்க.
a. தீண் b. தீண்டி c. தீ d. தீண்டு

50. பிறமொழிச் சொற்களை நீக்கித் தூய தமிழில் உள்ளதை எழுதுக.
a. நீ தான் என் அத்யந்த ஸ்நேகிதன் என்று கூறிச் சந்தோஷித்தான்.
b. நீதான் என் நெருங்கிய நண்பன் என்று கூறி மகிழ்ச்சி அடைந்தான்.
c. நீதான் என் அத்யந்த நண்பன் என்று கூறிச் சந்தோஷம் அடைந்தான்.
d. நீதான் என் அத்யந்த நண்பன் என்று கூறி சந்தோஷப்பட்டான்.

51. சந்திப் பிழையற்ற தொடரைக் குறிக்க:
a. சமூகச் சீர்திருத்த கருத்துகளை விதைத்துப் பயிராக்கி மகிழ்ந்தவர் பண்டிதர்.
b. சமூகச் சீர்திருத்த கருத்துகளை விதைத்து பயிராக்கி மகிழ்ந்தவர் பண்டிதர்.
c. சமூகச் சீர்திருத்தக் கருத்துகளை விதைத்துப் பயிராக்கி மகிழ்ந்தவர் பண்டிதர்.
d. சமூக சீர்திருத்த கருத்துகளை விதைத்து பயிராக்கி மகிழ்ந்தவர் பண்டிதர்.

52. உரவோர் - இலக்கணக் குறிப்பு தருக.
a. வினைமுற்று
b. பெயர்ச்சொல்
c. வினையாலணையும் பெயர்
d. தொழிற்பெயர்

53. பிறமொழிச் சொல்லற்ற தொடர் எது?
a. கண்ணன் அம்மாவிடம் உத்தரவு பெற்று திரைப்படத்திற்குச் சென்றான்
b. நாளுக்கு நாள் விஞ்ஞானம் வளர்ந்து வருகிறது
c. கண்ணன் தேநீர்க் கடைக்குச் சென்றான்
d. மாதவி அழகாக அலங்காரம் செய்திருந்தாள்

54. ஒருமை பன்மைப் பிழையற்ற தொடரைக்காண்க.
a. தமிழர்கள் அரபு நாட்டுடனும், யவன நாட்டுடனும் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர்.
b. சித்த மருத்துவத்தைப் பதினெண் சித்தர்கள் வளர்த்தார்
c. தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருந்தன.
d. இயங்குரப் படங்களைக் குழந்தைகள் விரும்பிப் பார்க்கின்றது.

55. “ஒறுத்தாரை ஒன்றாக வையாரே” - இத்தொடரில் “ஒறுத்தார்” என்பதன் இலக்கணக் குறிப்பு
a. முற்றெச்சம்
b. தொழிற்பெயர்
c. வினையாலணையும் பெயர்
d. வினையெச்சம்

56. ‘இல்லை’– என்பதன் இலக்கணக் குறிப்பு கூறுக.
a. தெரிநிலை வினைமுற்று
b. எதிர்மறை பெயரெச்சம்
c. குறிப்பு வினைமுற்று
d. வியங்கோள் வினைமுற்று

57. பிறமொழிச் சொற்கள் களவாத தொடரை எடுத்து எழுதுக.
a. சினிமா தியேட்டர் அருகாமையில் உள்ளது
b. திருநெல்வேலி சமஸ்தானம் பெரியது
c. வழாவிற்கு முக்கியஸ்தர்கள் வந்துள்ளனர்.
d. வானூர்தி ஒரு அறிவியல் ஆக்கம்

58. நீர், நீவிர், நீங்கள் ஆகியன _______ பெயர்கள்.
a. முன்னிலை ஒருமை
b. தன்மை ஒருமை
c. முன்னிலைப் பன்மை
d. தன்மைப் பன்மை

59. கீழ்க்காணும் ‘வல்லினம் மிகா இடம்’ குறித்த இலக்கணக்கூற்றில் பிழையான கூற்று எது?
a. எழுவாய்த் தொடரில் வல்லினம் மிகாது
b. வினைத் தொகையில் வல்லினம் மிகாது
c. இரண்டாம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகாது
d. உம்மைத் தொகையில் வல்லினம் மிகாது

60. ஒருமை பன்மை பிழைகளை நீக்குக.
நான் வாங்கிய நூல் இது அல்ல
a. நான் வாங்கிய நூல் இ∴து அல்ல
b. நான் வாங்கிய நூல் இ∴து அன்று
c. நான் வாங்கிய நூல் இது அன்று
d. நான் வாங்கின நூல் இது அன்று

61. உம் என்று கொல், அம்ம – எவ்வகைச் சொல் என்பதைக் கண்டறிக.
a. பெயர்ச்சொல்
b. வினைச்சொல்
c. உரிச்சொல்
d. இடைச்சொல்

62. ‘கண்ணன் நோயின்றி வாழ்ந்தான்’ - எவ்வகையான எச்சம்?
a. வினையெச்சம்
b. தெரிநிலை வினையெச்சம்
c. குறிப்பு வினையெச்சம்
d. முற்றெச்சம்

63. நான், யான், என்பன
a. தன்மை ஒருமைப் பெயர்கள்
b. தன்மைப் பன்மைப் பெயர்கள்
c. படர்க்கைப் பெயர்கள்
d. முன்னிலைப் பெயர்கள்

64. பிழையான கூற்றைக் கண்டறிக.
a. உம்மைத் தொகையில் வரும் வல்லினம் மிகாது
b. இரட்டைக் கிளவியில் வல்லினம் மிகாது
c. வினைத் தொகையில் வரும் வல்லினம் மிகாது
d. வன்றொடர்க் குற்றியலுகரத்தின் பின்வரும் வல்லினம் மிகாது

65. சுபாஷாபிமானம் - பொருள் கூறுக.
a. தாய் நாட்டுப் பற்று
b. தாய் மொழிப் பற்று
c. தாயின் மீது பற்று
d. சகோதரப் பற்று

66. ஒருமை பன்மை பிழைகளை நீக்கி எழுதும் போது பின்பற்றும் விதிகளில் சரியானவற்றைக் தேர்வு செய்க.
   1. எழுவாய் ஐம்பால்களுள் எதில் உள்ளதோ அதற்கேற்ற வினைமுற்றையே பயன்படுத்த வேண்டும்.
   2. கள் விகுதி பெற்ற எழுவாய் வினைமுற்றில் ஆர் விகுதி பெறும்
   3. தொடரில் காலத்தை உணர்த்தும் குறிப்புச் சொற்கள் இருப்பின் அதற்கேற்ற காலத்திலமைந்த வினை முற்றையே எழுத வேண்டும்.

   a. மூன்றும் சரி  b. 1, 3 மட்டும் சரி  c. 1 மட்டும் சரி  d. 2, 3 சரி

67. கொடுக்கப்பட்டுள்ள வேர்ச் சொல்லிற்கு பொருந்திய வினை முற்று, வினையெச்சம் பெயரெச்சம், தொழில் பெயர் வரிசையாக பொருந்தியவை காண்க.
   1. வா – வந்தான், வந்த, வந்து, வருதல்
   2. வில் - விற்றான், விற்ற, விற்று, விற்றல்
   3. எழு – எழுந்தான், எழுந்து, எழுந்த, எழுதுதல்
   4. கல – கலந்தான், கலந்து, கலந்த, கலத்தல்

   a. 3, 4  b. 3  c. 4  d. 1, 3

68. எதிர்ச் சொல்லை எழுத்தெழுது: - ஊக்கம்

   a. உற்சாகம்  b. சோர்வு  c. உடைமை  d. மயக்கம்

69. சந்திப்பிழையற்ற வாக்கியத்தைத் தேர்வு செய்க.
   1. கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்
   2. இசைத் தமிழில் வழி நாடக தமிழிற்கு இயக்கமில்லை
   3. கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி குறுகத்தறித்த குறள்
   4. கயிற்றுக் கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்

   a. 1 மற்றும் 3  b. 1 மற்றும் 2  c. 3 மற்றும் 4  d. 1 மற்றும் 4

70. சரியாகப் பொருந்தியவற்றைத் தேர்வு செய்க.
   1. பாடும் பாடல் - எதிர்காலப் பெயரெச்சம்
   2. படித்து வியந்தான் - வினையெச்சத் தொடர்
   3. மெல்ல வந்தான் - தெரிநிலைப் பெயரெச்சம்
   4. எழுதி முடித்தான் - குறிப்புப் பெயரெச்சம்

   a. 1 மற்றும் 2  b. 3 மற்றும் 4  c. 1 மற்றும் 3  d. 2 மற்றும் 4

71. சரியாக பிரித்து எழுதிய இணைகளைக் கண்டறிக.
   1. தட்பவெப்பம் = தட்ப + வெப்பம்
   2. தென்தமிழே = தெற்கு + தமிழே
   3. திண்டிறல் = திண்மை + இறல்
   4. மாதிரத்துறை = மாதிரம் + அத்து + உறை
   5. முழு நிலவு = முழுமை + நிலவு

   a. 2, 3, 4  b. 2, 3, 5  c. 1, 2, 3, 5  d. 1, 2, 3

72. சரியானவை அல்லாதவை கண்டறிக.
   1. குழந்தை சிரித்தான்
   2. குழந்தை சிரித்தது
   3. கதிரவன் உதித்தான்
   4. கதிரவன் உதித்தது
   5. பத்துத் தேங்காய் பறித்தோம்
   6. பத்து மரம் வீழ்ந்தது

   a. 2, 3 மற்றும் 5  b. 4 மற்றும் 5  c. 4, 5 மற்றும் 6  d. எதுவுமில்லை

73. பிறமொழிச் சொற்கள் இல்லாத வாங்கியத்தைத் தேர்வு செய்க.
1. பூங்காவில் ஏராளமான மரங்கள் உள்ளன.
2. என் மகனது காதணி விழா நேற்று நடந்தது
3. இந்த ஆண்டு பயிர்ச்சாகுபடி குறைந்துள்ளது.
4. நாய் தினமும் என்னைப்பார்த்து குறைப்பது வழக்கமாகிவிட்டது

a. 2 மற்றும் 4 b. 2 மற்றும் 3 c. 1, 2 மற்றும் 3 d. 3 மற்றும் 4

74. சந்திப்பிழை நீக்கி எழுதுக.
a. பண்பாட்டுக் கூறுகளைப் பேணிப் பாதுகாப்பது நம் கடமை.
b. பண்பாட்டுக் கூறுகளை பேணி பாதுகாப்பது நம் கடமை.
c. பண்பாட்டு கூறுகளைப் பேணி பாதுகாப்பது நம் கடமை.
d. பண்பாட்டு கூறுகளை பேணி பாதுகாப்பது நம் கடமை.

75. சந்திப் பிழையற்ற வாக்கியங்களைத் தேர்ந்தெடு:
A. காற்று பருவகாலங்களில் மேகத்தைக் கொண்டு வந்து மழையைத் தருகிறது.
B. காற்றுப் பருவகாலங்களில் மேகத்தை கொண்டு வந்து மழையைத் தருகிறது.
C. காற்று வீறுகொண்டு பயணிக்கத் தொடங்கினால் அதைத் தடுக்க யாராலும் இயலாது.
D. காற்று வீறுகொண்டுப் பயணிக்க தொடங்கினால் அதை தடுக்க யாராலும் இயலும்.

a. A, C சரி b. A, B சரி c. B, D சரி d. C, D சரி

76. பிரித்தெழுதுக:
அழுக்காறுடையான்கண்
a. அழுக்கு + ஆறு + உடையான் + கண் b. அழுக்காறு + உடையான்கண்
c. அழுக்காறு + உடையான் + கண் d. அழுக்கு + ஆறு + உடையான்கண்

77. உடம்படு மெய்யாக வரும் எழுத்துகள் எவை?
a. ய், ம் b. ய், ர் c. ய், ங் d. ய், வ்

78. சந்திப்பிழையின்றி வாக்கியங்கள் அமையும் வழிமுறைகளை ஆராய்க.
1. அடுக்குத் தொடரில் வல்லினம் மிகாது
2. வினைத் தொகையில் வல்லினம் மிகும்
3. பண்புத்தொகையில் வல்லினம் மிகும்
4. ஓரெழுத்து ஒரு மொழிக்குப்பின் வல்லினம் மிகாது
5. இரு பெயரொட்டுப் பண்புத் தொகையில் வல்லினம் மிகாது

a. 1, 2, 4 சரியானது b. 2, 3, 4 தவறானது
c. 2, 4, 5 தவறானது d. 1, 3, 5 சரியானது

79. எதிர்ச்சொல் சரியாக பொருந்தியவை

| | | | |
|---|---|---|---|
| 1) | கீழ்த்திசை | × | மேற்றிசை |
| 2) | ஓடுமீன் | × | உறுமீன் |
| 3) | மலர்தல் | × | குன்றல் |
| 4) | கனவு | × | நினவு |
| 5) | கட்டுங்கவி | × | வரகவி |
| 6) | காய்தல் | × | நனைதல் |

a. 1, 2, 5 b. 1, 2, 3 c. 1, 4, 5 d. 2, 5, 6

80. சந்திப் பிழை இன்றி அமைந்த தொடர்களைக் கண்டறிக.
1) சந்திப் பிழையற்றத் தொடர்களைக் கண்டறிக.
2) முரட்டுக் காளையைப் பிடித்து அடக்கினான்
3) நிலாச்சோறு ஊட்டியதை எங்கு பார்த்தாய்?
4) தமிழ் கற்றார் என்றும் ஒன்று சேர்வார்

a. 2, 3 b. 1, 2, 3 c. 3, 4 d. 2, 4

81. கூற்று : ஒன்று கொடு, ஏழு கல், பத்துப் பேர் என்பது பிழையற்றவை.
காரணம் : எட்டு பத்து தவிர மற்ற எண்களின் பின் வல்லினம் மிகாது.

a. கூற்று, காரணம் சரி
b. கூற்று காரணம் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
c. கூற்று காரணம் சரி, கூற்றினை காரணம் விளக்கவில்லை
d. கூற்று சரி, காரணம் தவறு

82. கீழே கொடுக்கப்பட்டுள்ளனவற்றுள் சரியாகப் பொருந்தாதவற்றைத் தேர்வு செய்க.

1) வென்ற என்பது வெல் என்ற வேர்ச்சொல்லின் வினையெச்சமாகும்.
2) தின்று வந்தான் - என்பதில் தின்று என்பது பெயரெச்சமாக தின் என்ற சொல்லுக்கு அமைந்துள்ளது.
3) நொந்தான் என்ற வினைமுற்றின் வேர்ச்சொல் நோ ஆகும்.
4) அரை என்பதற்கு அரைந்தவர் என்பது வினையாலனையும் பெயர்.
5) விற்றான் என்ற வினைமுற்றின் வினையெச்சமாக விற்று என்பதும் வேர்ச்சொல்லாக வில் என்றும் அமையும்.

a. 1, 4 b. 1, 2, 3 c. 2, 3 d. 2, 4, 5

83. கீழே காண்பவற்றுள் தமிழ்ச் சொற்கள் அல்லாதவை?

| | | | |
|---|---|---|---|
| 1. கேணி | 2. திருவிழா | 3. உத்தரவு | 4. கவனம் |
| 5. அர்த்தம் | 6. விரைவு | 7. புதுமை | 8. கோபம் |

a. ஐந்து சொற்கள் b. நான்கு சொற்கள்
c. மூன்று சொற்கள் d. இரண்டு சொற்கள்

84. ஒருமை, பன்மை பிழை நீங்கிய தொடர்களைக் கண்டறிக.

1) மாணவர்கள் தேர்வு எழுதினார்கள்
2) என் பாடப்புத்தகம் இதுவன்று
3) மாணவர் நேற்று தேர்வு எழுதினார்கள்
4) ஆற்று வெள்ளத்தில் மக்களும் மரங்களும் குடிசைகளும் ஆடுமாடுகளும் மிதந்து சென்றனர்.

a. 1, 2, 3 b. 2, 3, 4 c. 1, 2, 4 d. 1, 2

85. கீழ்காணும் கூற்றுகளை ஆராய்க.

1) வாய்திறத்தலாகிய முயற்சியால் பிறப்பவை – அ, ஆ
2) வாய் திறக்கும் முயற்சியின் நாக்கின் அடி ஓரமானது மேல்வாய்ப் பல்லைப் பொருந்தும் முயற்சியால் பிறப்பவை - இ, ஏ, ஐ
3) வாய் திறக்கும் முயற்சியுடன் இதழ்களைக் குவிப்பதால் பிறப்பவை – உ, ஊ, ஔ, ஐ

a. அனைத்தும் சரி b. 1 மட்டும் சரி c. 3 தவறு d. 2 தவறு

86. தவறான இணையைக் கண்டறிக.

a. வருமலை - வினைத்தொகை
b. இன்னிளங்குருளை - உவமைத்தொகை
c. தேமாங்கனி - உவமைத்தொகை
d. நற்றவம் - பண்புத்தொகை

87. கோ – என்ற வேர்ச்சொல்லில் அமைந்து வருவது

| | | | |
|---|---|---|---|
| 1. கோப்பு | 2. கோவை | 3. கோறு | 4. கோத்தல் |

a. 3 தவறு b. 1, 4 சரி c. 2, 3 தவறு d. அனைத்தும் சரி

88. கூற்றுகளை ஆராய்க.

1. ஏவல் வினைமுற்று – முன்னிலையில் வரும்
2. வியங்கோள் வினைமுற்று – ஒருமை பன்மை வேறுபாடு உண்டு
3. குறிப்பு வினைமுற்று – காலத்தையும் செய்பவரையும் வெளிப்படையாக காட்டும்
4. க, இய, இயர், அல் - வியங்கோள் வினைமுற்று விகுதிகள்

a. 1, 4 சரி b. 2, 3, 4 தவறு c. 1, 2 சரி d. 2, 4 சரி

89. ஊராண்மை – பிரித்து எழுதுக.

a. ஊரு + ஆண்மை b. ஊராண் + மை

c. ஊ + ஆண்மை d. ஊர் + ஆண்மை

90. சரியான எதிர்ச்சொல் இணைகளை தேர்ந்தெடுக்க

1) மலர்தல் × கூம்பல்

2) நீதி × அதர்மம்

3) மருவுக × ஒருவுக

4) வெ.்.கல் × விரும்புதல்

5) நல்லார் × தீயார்

a. 1, 2, 5 b. 1, 3, 5 c. 1, 3, 4 d. 1, 2 4

91. வல்லினம் மிகும் இடங்கில் தவறான கூற்றகளை தேர்ந்தெடுக்க

1. இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்களில் வல்லினம் மிகும்
2. ஓரெழுத்து ஒரு மொழிக்குப் பின் வல்லினம் மிகும்
3. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகாது
4. வினைத்தொகையில் வல்லினம் மிகும்

a. 1, 4 b. 2, 3 c. 3 d. 3, 4

92. வினைத்தொகை கூற்றுகளில் சரியானவற்றை தேர்க செய்க

1. காலம் கரந்த வினையெச்சம்
2. வினைத்தொகை என்பது பெயரெச்சத் தொடராகும்
3. விரிமலர், தாழ்பூந்துறை இரண்டும் வினைத்தொகைகள்

a. 1, 2 b. 2, 3 c. 1 d. 3

93. முதனிலைத் தொழிற்பெயர் - முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் சரியாகப் பொருந்திய இணைகள் எவை?

1. பெறு – பேறு 2. சுடு - சூடு

3. உடன்படு – உடன்பாடு 4. கெடு – கோடு 5. கொள் - கோள்

a. 3, 4 தவறு b. அனைத்தும் சரி c. 5 தவறு d. 4 தவறு

94. சந்திப்பிழையற்றவற்றைக் கண்டறிக.

1. தந்தையே பாருங்கள்
2. அப்படிப்பட்டக் காட்சி
3. கைத்தட்டு
4. வாழ்த்துகள்
5. கம்பரைப் போன்ற கவிஞர் யார்?

a. 1, 4, 5 b. 1, 3, 5 c. 1, 2, 5 d. 3, 4, 5

95. வேறொருபாயம் - பிரித்தெழுதுக

a. வேற் + ஒரு + உபாயம் b. வேற்று + ஒரு + உபாயம்

c. வேறு + ஒரு + பாயம் d. வேறு + ஒரு + உபாயம்

96. அ.்.தொருவற்கு - பிரித்தெழுதுக

a. அ.்.து + ஒருவன் + கு b. அ.்.து + ஒருவனுக்கு

c. அ.்.கு + ஒரு + கு d. அ..்.து + ஒருவதற்கு

97. பிரித்து எழுதுக: ‘செழுங்கனித்தீஞ்சுவை’

a. செழுமை + கனி + தீஞ்சுவை  b. செழும் + கனி + தீஞ்சுவை

c. செழும் + கனி + தீம் + சுவை  d. செழுமை + கனி + தீம் + சுவை

98. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தருக?

| | ஒரு | | ஒறு |
|---|---|---|---|
| a. | ஒருமை | - | பிழை |
| b. | ஒன்று | - | தண்டி |
| c. | எண் | - | தவறு |
| d. | ஒன்று | - | விலகு |

99. நட்பெழுத்துக்கள் அல்லாதது எது?

a. ண்ட  b. ந்த  c. ம்ப  d. க்ச

100. கீழ்கண்டவற்றுள் எது பிறமொழிச்சொல்.

a. காகிதம்  b. இயல்பு  c. தொடக்கம்  d. மணிமுடி

APPOLO STUDY CENTRE

# பொதுத்தமிழ் - அலகு 7

1. "நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும் பாற்பட்டன் றிருள்" - இக்குறள் இடம்பெற்றறுள்ள இயல் எது?
a. இல்லறவியல் b. துறவறவியல் c. ஊழியல் d. பாயிரவியல்

2. 'கற்றவனுக்குக் கட்டுச் சோறு வேண்டாம்' என்று குறிப்பிடும் இலக்கியம்
a. மூதுரை b. நாலடியார் c. பழமொழி நானூறு d. நான்மணிக்கடிகை

3. கீழ்வருவனவற்றுள் கவிஞர் கண்ணதாசன் இயற்றாத நூல் எது?
a. ஆயிரந்தீவு அங்கயற்கண்ணி b. இராஜ தண்டனை
c. மாங்கனி d. கொய்யாககனி

4. விடை தேர்க:
"தமிழை வடமொழி வல்லாண்மையினின்றும் மீட்பதற்காகவே இறைவன் என்னைப் படைத்தான்" என்று கூறியவர் யார்?
a. மறைமலையடிகள் b. தேவநேயப் பாவாணர்
c. பரிதிமாற்கலைஞர் d. பெருஞ்சித்திரனார்

5. 'பதினாறு செவ்வியல் தன்மைகளைக் கொண்டது செம்மொழி அதுவே நம் தமிழ்மொழி' எனக் கூறியவர்
a. மறைமலையடிகள் b. உ.வே. சாமிநாத ஐயர்
c. பாவாணர் d. பரிதிமாற்கலைஞர்

6. "'பிராகுயி' முதலிய வடபுல மொழிகளுக்கும் தாயாக விளங்குவது தமிழே" என்று கூறியவர்
a. டாக்டர் ராபர்ட் கேஸ்ட் b. ஹீராஸ் பாதிரியார்
c. டாக்டர் கால்டுவெல் d. டாக்டர் எமனோ

7. கவிஞர் தாரா பாரதி எழுதாத கவிதை நூல் இது
a. புதிய விடியல்கள் b. இது எங்கள் கிழங்கு
c. சொந்தச் சிறைகள் d. இன்னொரு சிகரம்

8. பொருத்துக:

| நூல் | ஆசிரியர் பெயர் |
|---|---|
| A. திரிகடுகம் | 1. விளம்பிநாகனார் |
| B. சிறுபஞ்சமூலம் | 2. கணிமேதாவியார் |
| C. ஏலாதி | 3. நல்லாதனார் |
| D. நான்மணிக்கடிகை | 4. காரியாசான் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 4 | 2 | 3 |
| b. | 3 | 2 | 1 | 4 |
| c. | 3 | 4 | 2 | 1 |
| d. | 4 | 1 | 3 | 2 |

9. தமிழகத்தின் 'வேர்ட்ஸ்வொர்த்' என்று புகழப்படுபவர்
a. வாணிதாசன் b. வண்ணதாசன் c. பாரதிதாசன் d. சுப்புரத்தின தாசன்

10. சரியாகப் பொருத்துக:

| நூலாசிரியர் | நூல் |
|---|---|
| A. சுரதா | 1. கொடிமுல்லை |
| B. முடியரசன் | 2. பள்ளிப் பறவைகள் |
| C. வாணிதாசன் | 3. எச்சில் இரவு |
| D. ஆலந்தூர் மோகனரங்கன் | 4. பூங்கொடி |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 2 | 1 | 3 |
| b. | 3 | 4 | 1 | 2 |
| c. | 3 | 1 | 2 | 4 |
| d. | 2 | 3 | 4 | 1 |

11. "மனைக்கு விளக்கம் மடவாள்; மடவாள்
தனக்குத் தகைசால் புதல்வர் ….."
-இப்பாடல் ஆசிரியரைக் கண்டறிந்து எழுதுக
a. விளம்பி நாகனார் b. சமண முனிவர்
c. முன்றுறை அரையனார் d. நல்லாதனார்

12. திங்களொடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும் உடுக்களோடும்
மங்குகடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன் பிறந்தோம் நாங்கள்
-எனத் தமிழின் பழஞ் சிறப்பினைப் பெருமிதம் பொங்கப்பாடிய கவிஞர்
a. பாரதியார் b. கண்ணதாசன் c. சுரதா d. பாரதிதாசன்

13. பொருந்தாத இணையைக் கண்டறிக

| ஆசிரியர் | | இயற்றிய நூல் |
|---|---|---|
| a. வீரமாமுனிவர் | - | பரமார்த்தகுரு கதை |
| b. தேவநேயப்பாவானர் | - | தமிழர் திருமணம் |
| c. திரு. வி.க | - | சைவத் திறவு |
| d. பெருஞ்சித்திரனார் | - | தமிழ்ச் சோலை |

14. பொருத்துக:

| நூல் | ஆசிரியர் |
|---|---|
| A. பாண்டியன் பரிசு | 1. பாரதியார் |
| B. குயில் பாட்டு | 2. நாமக்கல் கவிஞர் |
| C. ஆசிய ஜோதி | 3. பாரதிதாசன் |
| D. சங்கொலி | 4. கவிமணி |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 2 | 1 | 3 |
| b. | 1 | 3 | 2 | 4 |
| c. | 3 | 1 | 4 | 2 |
| d. | 2 | 4 | 3 | 1 |

15. பொருந்தாத இணையினைக் காண்க:
a. களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே - புறநானூறு
b. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் - திருக்குறள்
c. கூடலில் ஆய்ந்த ஒண்தீந்தமிழன் - சிலப்பதிகாரம்
d. பண்ணொடு தமிழொப்பாய் - தேவாரம்

16. பொருத்துக:

A. மூதுரை — 1. சிவப்பிரகாசர்
B. வெற்றிவேற்கை — 2. முனைப்பாடியார்
C. நன்னெறி — 3. அதிவீரராம பாண்டியர்
D. அறநெறிச்சாரம் — 4. ஔவையார்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 1 | 2 |
| b. | 2 | 3 | 1 | 4 |
| c. | 3 | 4 | 2 | 1 |
| d. | 4 | 1 | 2 | 3 |

17. 'திருக்கை வழக்கம்' என்னும் நூலின் ஆசிரியர் யார்?
a. நக்கீரர் b. ஒட்டக்கூத்தர் c. இளங்கோவடிகள் d. கம்பர்

18. வீரமாமுனிவர் தமது எத்தனை வயதில் தமிழகம் வந்து தமிழ் படித்து காப்பியம் படைத்தார்
a. நாற்பது b. முப்பது c. இருபது d. அறுபது

19. 'இயேசு காவியம்'– என்னும் நூலின் ஆசிரியர் பெயர் யாது?
a. வாணிதாசன் b. கண்ணதாசன்
c. ஈரோடு தமிழன்பன் d. மு. மேத்தா

20. "உற்றுழி உதவியும் உறு பொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே"
இப்பாடல் இடம்பெறும் நூல்
a. அகநானூறு b. புறநானூறு c. நற்றிணை d. திருக்குறள்

21. 'நூறாசிரியம்' என்னும் கவிதை நூலின் ஆசிரியர்
a. கவிஞர் மீரா b. கவிஞர் சுரதா
c. கவிஞர் பெருஞ்சித்திரனார் d. மு. மேத்தா

22. மீதூண் விரும்பேல் என்று கூறியவர்
a. திருமூலர் b. திருவள்ளுவர் c. பாரதியார் d. ஔவையார்

23. "மாணிக்கவாசகர் வரலாறும் கால ஆராய்ச்சியும்' என்ற ஆராய்ச்சி நூலை எழுதியவர் யார்?
a. வ.சுப. மாணிக்கம் b. மறைமலை அடிகள்
c. வ.உ.சி d. செல்வக் கேசவராய முதலியார்

24. யார் காப்பார் என்று தமிழன்னை ஏங்கிய போது நான் காப்பேன் என்று எழுந்தார் ஒருவர். அவர் யார்?
a. உ.வே. சாமிநாதர் b. மீனாட்சி சுந்தரனார்
c.கல்யாண சுந்தரனார் d. சுந்தரம் பிள்ளை

25. அறவுரைக்கோவை எனும் அடைமொழியால் குறிக்கப்படும் நூல் யாது?
a. திருக்குறள் b. திரிகடுகம் c. பழமொழி நானூறு d. முதுமொழிக்காஞ்சி

26. பின்வருவனவற்றுள் வீரமாமுனிவர் எழுதாத நூல் எது?
a. ஞானோபதேசம் b. திருக்காவலூர்க் கலம்பகம்
c. தொன்னூல் விளக்கம் d. கந்தர் கலிவெண்பா

APPOLO STUDY CENTRE

27. மலர்தலை ஞாலத்து மன்னுயிர்க் கெல்லாம்
தகுதியால் வாழ்தல் இனிது – என்று உயிர்களின் வாழ்க்கை முறையைப் பற்றிக் கூறும் நூல்
a. திரிகடுகம் b. இனியவை நாற்புத c. திருக்குறள் d. திருவருட்பா

28. வேலுநாச்சியார் சிவகங்கையை மீட்ட ஆண்டு
a. 1730 b. 1772 c. 1780 d. 1831

29. 'தேம்பாவணி' நூலில் உள்ள படலங்களின் எண்ணிக்கை
a. 39 படலங்கள் b. 30 படலங்கள்
c. 32 படலங்கள் d. 36 படலங்கள்

30. 'திரிகடுகம்' பற்றிய கூற்றுக்களில் பொருத்தமற்றதைக் குறிப்பிடுக.
a. திரிகடுகம் நூற்று இரண்டு வெண்பாக்களைக் கொண்டது
b. திரிகடுகத்தின் ஆசிரியர் நல்லாதனார்
c. திரிகடுகம் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று
d. சுக்கு, மிளகு, திப்பிலியால் ஆன மருந்துக்குப் பெயர் திரிகடுகம்

31. "இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்" எனும் பாடல் இடம்பெற்றுள்ள நூல் யாது?
a. நான்மணிக்கடிகை b. நாலடியார்
c. அறவுரைக்கோவை d. இனியவை நாற்பது

32. சிறுபஞ்சமூலம் என்ற நூலை இயற்றிய ஆசிரியரின் சமயம்
a. இந்து சமயம் b. சமண சமயம்
c. கிறித்துவ சமயம் d. பௌத்த சமயம்

33. 'ஏலாதி' பற்றிய கீழ்காணும் கூற்றுகளில் சரியானவை எவை?
I. பாடல்தோறும் ஆறு கருத்துகளை விளக்கிக் கூறும் அற இலக்கியம், 'ஏலாதி'
II. 'ஏலாதி' நூல் தற்சிறப்புப்பாயிரம், சிறப்புப்பாயிரம் உட்பட நூறு செய்யுட்களைக் கொண்டது
III. ஏலக்காய், இலவங்கம், சிறுநாவற்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் ஆறு பொருள்கள் சேர்ந்த மருந்து உடல்பிணி போக்கி நலம் செய்யும்
IV. அதுபோல் ஏலாதியில் ஒவ்வொரு செய்யுளிலும் சொல்லப்பட்ட எட்டு கருத்துகளும் மக்களது மனநோயாகிய அறியாமையைப் போக்கித் தெளிவு தருவன.
a. II மற்றும் III b. III மற்றும் IV c. I மற்றும் III d. I மற்றும் IV

34. 'DRAVIDIAN FEDERATION' என்னும் ஆங்கில இதழை நடத்திய தமிழறிஞர்
a. சி. இலக்குவனார் b. ஜே.எம். நல்லாசாமிப்பிள்ளை
c. மறைமலையடிகள் d. திரு.வி. கல்யாணசுந்தரனார்

35. முடியரசன் பற்றிய தவறான கூற்று எது?
a. பூங்கொடி காவியம் தமிழக அரசு பரிசு பெற்றது
b. பறம்பு மலையில் கவியரசு பட்டம் கிடைத்தது
c. இவரது கவிதைகளை சாகித்ய அகாடமி பிரெஞ்சிலும், சமஸ்கிருதத்திலும் மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளது
d. காவியப்பாவை இவர் எழுதியது

36. கூற்றைக் கொண்டு நபரைக் கண்டறிக:
i. சாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டவர்
ii. தனது மறைவின் பொழுதும் எச்சடங்குகளும் வேண்டா என்றவர்
iii. காரைக்குடி மீ.சு. உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தவர்
iv. பறம்புமலையில் நடந்த விழாவில் ஓர் உயர் பட்டம் பெற்றவர்

a. கண்ணதாசன் b. சிற்பி பாலசுப்பிரமணியம்
c. ந. காமராசன் d. முடியரசன்

37. பொருத்துக:

A. புத்தகசாலை 1. சுரதா
B. தீக்குச்சிகள் 2. தாராபாரதி
C. சிக்கனம் 3. பாரதிதாசன்
D. காடு 4. அப்துல் ரகுமான்
5 வாணிதாசன்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 5 | 3 | 2 | 4 |
| b. | 1 | 4 | 2 | 5 |
| c. | 3 | 4 | 1 | 5 |
| d. | 1 | 2 | 4 | 3 |

38. பொருத்துக:

கவிஞர் பட்டப்பெயர்கள்
A. மருதகாசி 1. பாவலர் மணி
B. வாணிதாசன் 2. கவியரசு
C. சுரதா 3. திரைக்கவித்திலகம்
D. முடியரசன் 4. கலைமாமணி

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |
| b. | 2 | 1 | 3 | 4 |
| c. | 3 | 1 | 4 | 2 |
| d. | 4 | 3 | 2 | 1 |

39. சரியான ஆசிரியரைக் குறிப்பிடுக.

“கோனோக்கி வாழும் குடிபோன் றிருந்தேனே”

a. தொண்டரடிப் பொடியாழ்வார் b. பொய்கையாழ்வார்
c. குலசேகர ஆழ்வார் d. மதுரகவி ஆழ்வார்

40. கடற் பயணத்தின் சிறப்பை – அவை விளக்கும் நூலோடு பொருத்துக:

A. விளைந்து முதிர்ந்த விழுமுத்து 1. பட்டினப்பாலை
B. பொன்னுக்கு ஈடாக மிளகு ஏற்றுமதி 2. புறநானூறு
C. காற்றின் போக்கை அறிந்து கலம் செலுத்தினர் 3. மதுரைக்காஞ்சி
D. கட்டுத்தறியில் கட்டிய யானை அசைவது போல் நாவாய் அசைந்தது 4. அகநானூறு

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 2 | 1 |
| b. | 3 | 4 | 2 | 1 |
| c. | 1 | 2 | 3 | 4 |
| d. | 3 | 4 | 1 | 2 |

41. “வள்ளுவரும் தம் குறள் பாவடியால் வையத்தார்
உள்ளுவதெல்லாம் அளர்ந்தார் ஓர்ந்து” - எனத் திருக்குறளை பாராட்டியவர்

a. பரிமேலழகர் b. கபிலர் c. மாங்குடி மருதனார் d. பரணர்

42. பத்துப்பாட்டில் குறைந்த அடிகளையுடைய நூல்
a. நெடுநல்வாடை b. முல்லைப் பாட்டு c. குறிஞ்சிப் பாட்டு d. மதுரைக் காஞ்சி

43. 'அறுமோ, நரி நக்கிற்று என்று கடல்'? - இது பயின்று வந்த நூல் எது?
a. பழமொழி b. நாலடியார் c. திருக்குறள் d. ஆசாரக்கோவை

44. கீழ்க்கண்டவற்றுள் தவறானது எது?
a. திருமுருகாற்றுப்படை - 316
b. பொருநராற்றுப்படை - 248
c. சிறுபாணாற்றுப்படை - 269
d. பெரும்பாணாற்றுப்படை - 500

45. பொருத்துக:
A. வீரகாவியம் — 1. நா. காமராசன்
B. இயேசு காவியம் — 2. சிற்பி. பாலசுப்ரமணியம்
C. ஒளிப்பறவை — 3. கண்ணதாசன்
D. சகாராவைத் தாண்டாத ஒட்டகங்கள் — 4. முடியரசன்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 2 | 1 |
| b. | 3 | 2 | 1 | 4 |
| c. | 2 | 1 | 4 | 3 |
| d. | 1 | 2 | 3 | 4 |

46. வீறுடைச் செம்மொழி தமிழ்மொழி, உலகம் வேரூன்றிய நாள்முதல் உயிர்மொழி'' என்று தமிழின் பெருமைகளைப் பறைசாற்றியவர்.
a. பாவலரேறு பெருஞ்சித்திரனார்
b. பரிதிமாற் கலைஞர்
c. அயோத்திதாசப் பண்டிதர்
d. பாவாணர்

47. சரியான விடையை எழுதுக.
நடுதிராவிட மொழிகள் யாவை?
a. கதபா, பெங்கோ, கோயா
b. தோடா, கோத்தா, கொரகா
c. மால்தோ, குரூக், பிராகுயி
d. கோத்தா, கூவி, மால்தோ

48. பதினெண்கீழ்க்கணக்கில் உள்ள ஒரே தொகை நூல்?
a. நான்மணிக் கடிகை
b. நாலடியார்
c. பழமொழி நானூறு
d. திருக்குறள்

49. பட்டியல் Iல் உள்ள சொற்றொடரைப் பட்டியல் II ல் உள்ள சொற்றொடருடன் பொருத்துக

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| A. ஒழுக்கத்தின் எய்துவர் | 1. செல்வம் நிலைக்காது |
| B. இழுக்கத்தின் எய்துவர் | 2. மேன்மை |
| C. பொறாமை உடையவரிடம் | 3. உயர்வு இருக்காது |
| D. ஒழுக்கமில்லாதவரிடம் | 4. எய்தாப் பழி |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 4 | 1 | 3 |
| b. | 2 | 3 | 1 | 4 |
| c. | 1 | 4 | 2 | 3 |
| d. | 3 | 4 | 1 | 2 |

50. அதியமானின் தூதராக ஔவை சென்றதைக் கூறும் நூல்
a. புறநானூறு
b. அகநானூறு
c. ஐங்குறுநூறு
d. குறுந்தொகை

51. ‘செய்யும் தொழிலே தெய்வம் - அந்தத்
திறமைதான் நமது செல்வம்’ - இவ்வரிகளைப் பாடிய கவிஞர் யார்?
a. பாரதிதாசன்
b. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
c. கவிமணி
d. மருதகாசி

52. கீழே காண்பனவற்றுள் பொருத்தமற்றதைத் தெரிவு செய்க:
a. தமிழகத்தின் ‘வேர்ட்ஸ்வொர்த்’ என்று புகழப்பட்டவர் புதுவையை அடுத்த வில்லியனூரில் பிறந்த வாணிதாசன்
b. ‘திரைக்கவித்திலகம் அ. மருதகாசி பாடல்கள்’ என்னும் தலைப்பில் அ. மருதகாசியின் பாடல்கள் தொகுக்கப்பட்டு வெளிவந்துள்ளது
c. நீதிநெறி விளக்கம், கந்தர் கலிவெண்பா, கந்தர் அநுபூதி, முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் ஆகிய நூல்களைக் குமரகுருபரர் பாடினார்
d. காரைமுத்துப்புலவர், வணங்காமுடி, பார்வதிநாதன், ஆரோக்கியநாதன், கமகப்பிரியா எனப் புனைபெயர்கள் கண்ணதாசனுக்கு உண்டு

53. வீரமாமுனிவர் தமிழ் முனிவர்களுள் ஒருவராக விளங்குகின்றார் என்று கூறியவர் யார்?
a. ரா.பி. சேதுப்பிள்ளை
b. குணங்குடி மஸ்தான்
c. ஆறுமுக நாவலர்
d. பரிதிமாற்கலைஞர்

54. அற நூல்களிலிருந்து ஆய்ந்தெடுத்துத் ‘தமிழ்ச் செய்யுட் கலம்பகம்’ – என்னும் நூலாகத் தொகுத்து விளக்கம் அளித்தவர்.
a. H.A. கிருஷ்ணப் பிள்ளை
b. வீரமாமுனிவர்
c. ஜி.யு. போப்
d. கால்டுவெல்

55. பொருத்துக:

| தமிழறிஞர் | சிறப்பு அடைமொழி |
|---|---|
| A. பெருஞ்சித்திரனார் | 1. தமிழ்த்தாத்தா |
| B. உ.வே.சா | 2. சொல்லின் செல்வர் |
| C. இரா.பி.சேதுப்பிள்ளை | 3. தமிழ்த் தென்றல் |
| D. திரு.வி.க. | 4. தனித்தமிழ் இயக்க மறவர் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 2 | 4 | 1 |
| b. | 2 | 4 | 1 | 3 |
| c. | 4 | 1 | 2 | 3 |
| d. | 2 | 3 | 4 | 1 |

56. ‘ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலில் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை’ எனக் கூறியவர்
a. பரணர்
b. கூடலூர் கிழார்
c. பெருஞ்சித்திரனார்
d. ஔவையார்

57. ‘திரு.வி.க. அவர்களுக்கு வாய்த்த மொழி நடை, மலை எனத் தமிழ் உலகில் ஓங்கி உயர்ந்துள்ளது’ எனப் பாராட்டியவர்:
a. அறிஞர் அண்ணா
b. கல்கி
c. தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்
d. டாக்டர் மு.வ

58. ‘ப∴றுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள’ இவ்வாறு குறிப்பிடும் நூல்
a. மணிமேகலை
b. புறநானூறு
c. சிலப்பதிகாரம்
d. புறப்பொருள் வெண்பாமாலை

59. பொருத்துக:

| நூல் | ஆசிரியர் |
|---|---|
| A. ஆசாரக் கோவை | 1. கூடலூர் கிழார் |
| B. கார் நாற்பது | 2. விளம்பி நாகனார் |
| C. முதுமொழிக்காஞ்சி | 3. கண்ணன் கூத்தனார் |
| D. நான்மணிக்கடிகை | 4. பெருவாயிற் முள்ளியார் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 1 | 2 | 4 |
| b. | 4 | 3 | 1 | 2 |
| c. | 3 | 2 | 4 | 1 |
| d. | 1 | 3 | 2 | 4 |

60. “கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு
முன்தோன்றிய மூத்தக் குடி” - என தமிழினத்தின் தொன்மையைப் பற்றிக் கூறும் நூலின் பெயர்
a. புறநானூறு
b. புறப்பொருள் வெண்பாமாலை
c. பதிற்றுப்பத்து
d. தொல்காப்பியம்

61. பாவாணர் சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட இயக்குநராக பணியமர்த்தப்பட்ட வருடம்
a. 1954 b. 1964 c. 1974 d. 1984

62. ‘மலைபடுகடாம்’ _____________ ஆற்றுப்படை எனவும் வழங்கப்படுகிறது.
a. திருமுருகாற்றுப்படை
b. சிறுபாணாற்றுப்படை
c. பெரும்பாணாற்றுப்படை
d. கூத்தராற்றுப்படை

63. ‘சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்’’ என முழங்கியவர் ____________.
a. பாரதியார்
b. பாரதிதாசன்
c. பாவாணர்
d. சோமசுந்தரபாரதியார்

64. பெரியாரைத் ‘தொண்டு செய்து பழுத்த பழம்’ எனப் பாராட்டிய கவிஞர் ________________.
a. கவிஞர் சுரதா
b. பாரதிதாசன்
c. நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை
d. வாணிதாசன்

65. கிறித்துவக் கம்பர் என அழைக்கப்படுபவர் யார்?
a. சீகன்பால்கு
b. H.A. கிருஷ்ணப்பிள்ளை
c. வீரமாமுனிவர்
d. ஜி.யு. போப்

66. “மன்புலவன் வள்ளுவன்வாய்ச் சொல்’’ – என்று பாடியவர் யார்?
a. கபிலர்
b. ஔவையார்
c. இறையனார்
d. சுந்தரம்பிள்ளை

67. பின்வரும் கூற்றுகளை ஆராய்க.

I. புறநானூற்றின் கடவுள் வாழ்த்துப்பாடலைப் பாடியவர் பெருந்தேவனார் ஆவார்

II. புறநானூற்றின் சில் பாடல்களை ஜி.யு. போப் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்

III. பரிபாடல் அகமும், புறமும் கலந்த நூல் ஆகும்.

IV. தற்பொழுது கிடைத்துள்ள பரிபாடலில் புறப்பாடல்கள் மிகுதியாக உள்ளன.

இவற்றுள் தவறானதைக் கண்டறிக.

a. II மட்டும் தவறு b. III மட்டும் தவறு

c. IV மட்டும் தவறு d. எதுவுமில்லை

68. பொருத்துக:

A. பேயனார் 1. மருதம்

B. ஓதலாந்தையார் 2. முல்லை

C. கபிலர் 3. நெய்தல்

D. அம்மூவனார் 4. குறிஞ்சி

E. ஓரம்போகியார் 5. பாலை

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 5 | 2 | 1 |
| b. | 2 | 5 | 4 | 3 | 1 |
| c. | 2 | 4 | 3 | 2 | 5 |
| d. | 4 | 2 | 1 | 5 | 3 |

69. ஐங்குறுநூற்றின் சரியான திணைவைப்பு முறையைக் கண்டுபிடி.

a. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை

b. மருதம், பாலை, குறிஞ்சி, முல்லை, நெய்தல்

c. மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை

d. முல்லை, குறிஞ்சி, நெய்தல், மருதம், பாலை

70. "இல்லறவியல்" – திருக்குறளின் எந்தப் பிரிவில் அமைந்துள்ளது?

a. அறத்துப்பால் b. பொருட்பால்

c. காமத்துப்பாடல் d. எதுவுமில்லை

71. தென்தமிழ் தெய்வப் பரணி என கலிங்கத்துப் பரணியைப் போற்றியவர்

a. சொக்கநாதப் புலவர் b. புகழேந்தி

c. ஔவையார் d. ஒட்டக்கூத்தர்

72. கதம்பம் என்பதே கலம்பகம் என திரிந்தது என்றவர் யார்?

a. குமரகுருபரர் b. உ.வே.சா

c. ஒட்டக்கூத்தர் d. பாரதியார்

73. தமிழரின் உயரிய வாழ்வியல் சிந்தனைக் கருவூலமாக விளங்கும் நூல் எது?

a. திருக்குறள் b. புறநானூறு

c. புறப்பொருள் வெண்பாமாலை d. நாலாயிர திவ்ய பிரபந்தம்

74. பின்வருவனவற்றுள் உமறுப்புலவர் எழுதிய என்பது பாக்களைக் கொண்ட நூல்

a. முதுமொழி மாலை b. முகுந்தமாலை

c. திருவாரூர் நான்மணிமாலை d. எதுவுமில்லை

75. "மன்னனுக்குத் தன்தேச மல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு – என்று கற்றோரின் சிறப்பைக் கூறியவர் யார்?
a. ஔவையார் b. கம்பர் c. மறைமலையடிகள் d. கபிலர்

76. 'ஆவுந் தமிழரும்' என்னும் உடைநடையை எழுதியவர் யார்?
a. மு. வரதராசனார் b. மறைமலையடிகள்
c. பரிதிமாற்கலைஞர் d. தேவநேயப்பாவாணர்

77. பொருத்துக :
A. அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி — 1. கம்பர்
B. ஓர் அணுவினைச் சதகூறிட்ட கோணினும் உளன் — 2. ஔவையார்
C. தீம்பிழி எந்திரம் பந்தல் வருந்த — 3. பதிற்றுப்பத்து
D. அந்தக் கேணியும் எந்திரக் கிணறும் — 4. பெருங்கதை

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 1 | 3 | 4 |
| b. | 2 | 1 | 4 | 3 |
| c. | 1 | 2 | 3 | 4 |
| d. | 1 | 2 | 4 | 3 |

78. திருவள்ளுவர் தோன்றியிராவிட்டால், தமிழன் என்னும் ஓர் இனம் இருப்பதாக உலகத்தார்க்குத் தெரிந்திருக்காது. திருக்குறள் என்னும் ஒரு நூல் தோன்றியிராவிட்டால், தமிழ் மொழி என்னும் ஒரு மொழி இருப்பதாக உலகத்தார்க்குத் தெரிந்திருக்காது என்று புகழ்ந்தவர் யார்?
a. திரு. வி. கலியாண சுந்தரனார் b. கி.ஆ.பெ. விசுவநாதம்
c. கால்டுவெல் d. ஜி.யு. போப

79. வெறுங்கை என்பது மூடத்தனம்
விரல்கள் பத்தும் மூலதனம் - என்ற வரிக்கு சொந்தக்காரர் யார்?
a. பாரதியார் b. சாலை இளந்திரையன் c. தாரா பாரதி d. பாரதிதாசன்

80. புனிதமுற்று மக்கள்புது வாழ்வு வேண்டில்
புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும் - என்று பாடியவர் யார்?
a. பாரதிதாசன் b. பாரதியார்
c. இராமலிங்க வள்ளலார் d. கணிமேதாவியார்

81. உலக வரலாற்றிலேயே மேதையான மாணிக்கவாசரை விடப் புலமை, உழைப்பு, துன்பத்தைப்‘ பொறுத்தல், இடையறா நிலையான பக்தி ஆகியவற்றுடன் நம் மனத்தைக் கவர்கின்றவர் யாரும் இல்லை -இக்கூற்று யாருடையது?
a. தாயுமானவர் b. வீரமாமுனிவர் c. ஜி.யு. போப் d. கால்டுவெல்

82. மதுரையில் தமிழ்மாநாடு நடைப்பெற்ற வருடம்
a. 1961 b. 1980 c. 1981 d. 1971

83. பட்டியல் I-ல் உள்ள தமிழ் ஆளுமைகளின் புனைபெயர்களை, பட்டியல் II-ல் உள்ள அவர்களது இயற்பெயர்களோடு பொருத்துக

| புனைபெயர் | இயற்பெயர் |
|---|---|
| A. புதுமைப்பித்தன் | 1. செகதீசன் |
| B. ஈரோடு, தமிழன்பன் | 2. எத்திராஜ் |
| C. வாணிதாசன் | 3. முத்தையா |
| D. கண்ணதாசன் | 4. சொ. விருத்தாசலம் |

A B C D

| | | | | |
|---|---|---|---|---|
| a. | 2 | 3 | 4 | 1 |
| b. | 4 | 1 | 2 | 3 |
| c. | 3 | 4 | 1 | 2 |
| d. | 4 | 3 | 2 | 1 |

84. பட்டியல் I உடன் பட்டியல் II ஐப் பொருத்துக.

| பட்டியல் I<br>சிறப்பு அடைமொழிப் பெயர் | பட்டியல் II<br>பெயர் |
|---|---|
| A. தமிழ்நாட்டின் இரசூல் கம்சதேவ் | 1. புதுமைப்பித்தன் |
| B. தமிழ்நாட்டின் மாப்பசான் | 2. அனுத்தமா |
| C. தமிழ்நாட்டின் வால்டர் ஸ்காட் | 3. பாரதிதாசன் |
| D. தமிழ்நாட்டின் ஆஸ்டின் | 4. கல்கி |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 1 | 2 | 3 |
| b. | 3 | 1 | 4 | 2 |
| c. | 2 | 1 | 3 | 4 |
| d. | 4 | 1 | 3 | 2 |

85. உலக மொழிகளுக்கெல்லாம் தாய்மொழி தமிழாகத்தான் இருத்தல் வேண்டும் என்ற மொழியியல் அறிஞர்
a. கால்டுவெல் b. நோம்சாம்சுகி c. கபில் சுவலபில் d. மாக்சு முல்லர்

86. யாருக்கு இந்த உலகம் பகலிலும் இருளாகவே தோன்றும் என வள்ளுவர் கூறுகின்றார்?
a. அன்பு இல்லாதவர்கள் b. ஒழுக்கம் இல்லாதவர்கள்
c. பொறுமை இல்லாதவர்கள் d. பண்பு இல்லாதவர்கள்

87. ‘மூன்றுரை அரையனார்’ – என்றப் பெயரில் அரையனார் என்னும் சொல்லின் பொருள்
a. ஊர் b. அரசன் c. ஆறு d. நாடு

88. ‘செருஅடுதோள் நல்லாதன்’ எனப் பாராட்டுவது
a. தொல்காப்பியம் b. அகத்தியம் c. பாயிரம் d. நன்னூல்

89. ‘திராவிட’ எனும் சொல்லே தமிழ் எனும் சொல்லிலிருந்து உருவானதாகும் என்று கூறியவர்
a. ஈராஸ் பாதிரியார் b. கால்டுவெல் c. ஜி.யு. போப் d. வீரமாமுனிவர்

90. அறவுரைக்கோவை எனும் நூலில் உள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை
a. 1330 b. 30 c. 10 d. 133

91. “தன்னே ரில்லாத தமிழ்” இத்தொடர் இடம் பெற்ற நூல்
a. திருக்குறள் b. தொல்காப்பியம்
c. தண்டியலங்காரம் d. நன்னூல்

92. வசன நடைகைவந்த வள்ளலார் என ஆறுமுக நாவரைப் பாராட்டியவர்
a. ஜி.யு.போப் b. பரிதிமாற் கலைஞர்
c. வீரமாமுனிவர் d. ர.பி.சேதுப்பிள்ளை

93. நான் நிரந்தரமானவன் அழிவதில்லை
எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை
எனக் கவிதை பாடியவர்
a. சுரதா b. கண்ணதாசன் c. பாரதிதாசன் d. மு. மேத்தா

94. "நல்லது செய்த லாற்றீ ராயினும
அல்லது செய்த லோம்பு மினது தான்" - என்ற வரிகள் இடம் பெற்ற நூல் எது?
a. அகநானூறு b. புறநானூறு
c. திருக்குறள் d. ஐங்குறுநூறு

95. தீரா இடும்பை தருவது எது?
a. ஆராயாமை, ஐயப்படுதல் b. குணம், குற்றம்
c. பெருமை, சிறுமை d. நாடாமை, பேணாமை

96. "ஆட்சிக்கும் அஞ்சாமல் யாவரேனும்
ஆள்கவெனத் துஞ்சாமல், தனது நாட்டின்
மீட்சிக்குப் பாடுபவன் கவிஞன் ஆவான்" – என்று பாடியவர் யார்?
a. பாரதிதாசன் b. கண்ணதாசன்
c. முடியரசன் d. பாரதியார்

97. விடைத்தேர்க: இலக்கியச் செய்திகளோடு அறிவியல் துறைப்பொருள்களையும் முதன் முதலாகச் சேர்ந்து விளக்கம் தந்த நூல் எது?
a. அபிதான கோசம் b. அபிதான சிந்தாமணி
c. விவேக சிந்தாமணி d. சீவக சிந்தாமணி

98. 'நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா' என்று பாராட்டப்பட்டவர் யார்?
a. பாரதிதாசன் b. கண்ணதாசன் c. பாரதியார் d. வாணிதாசன்

99. "வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே" என்று பாடியவர்
a. மாறோக்கத்து நப்பசலையார் b. மோசிகீரனார்
c. மதுரை பூதனிளநாகனார் d. கண்ணகனார்

100. மடங்களிலே மறைந்து கிடந்த தமிழை மக்கள் மடியிலே தவழச் செய்தவர்
a. மறைமலையடிகள் b. குன்றக்குடி அடிகளார்
c. உ.வே. சாமிநாத ஐயர் d. பரிதிமாற் கலைஞர்

# பொதுத்தமிழ் - அலகு 2 & 3

1. ஈதல் என்பதன் எதிர்ச்சொல்
a. கொடுத்தல் b. ஏற்றல் c. அளித்தல் d. வழங்குதல்

2. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.
a. வியத்தல் b. வாழ்க்கை c. ஆளல் d. பாடியவள்

3. சந்திப் பிழையைச் சரிபார்த்து எழுதுக:
a. சிற்பகலை கூடமாக திகழ்கிறது. b. சிற்பக்கலை கூடமாக திகழ்கிறது.
c. சிற்பக்கலைக் கூடமாகத் திகழ்கிறது. d. சிற்பக்கலைக் கூடமாக திகழ்கிறது

4. சரியான அகர வரிசையை எழுதுக.
a. சொம்பு, செம்மை, சாட்சி, சரம் b. செம்மை, சாட்சி, சரம், சொம்பு
c. சாட்சி, சரம், செம்மை, சொம்பு d. சரம், சாட்சி, செம்மை, சொம்பு

5. சரியான அகர வரிசையை எழுதுக:
a. குருவி, கோட்டை, காட்சி, கரம் b. காரம், காட்சி, குருவி, கோட்டை
c. கோட்டை, குருவி, காட்சி, கரம் d. காட்சி, கரம், குருவி, கோட்டை

6. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குதல்
a. உலகம் தமிழ் மொழி வாழட்டும் உள்ள வரையிலும்
b. உலகம் வாழட்டும் உள்ளவரையிலும் தமிழ் மொழி
c. உலகம் உள்ள வரையிலும் தமிழ்மொழி வாழட்டும்
d. உலகம் தமிழ் மொழி உள்ளவரையிலும் வாழட்டும்

7. நிறுத்தற்குறி அறிக (எது சரியானது)?
a. பாவை அண்ணனைப், பார்த்து "அண்ணா எனக்கு! ஓர் உதவி செய்வாயா என்று கேட்டாள்.
b. பாவை அண்ணவைப் பார்த்து அண்ணா? எனக்கு ஓர் உதவி செய்வாயா? என்று கோட்டாள்?
c. பாவை அண்ணனைப் பார்த்து, "அண்ணா எனக்கு ஓர் உதவி செய்வாயா?" என்று கேட்டாள்.
d. பாவை அண்ணனைப் பார்த்து அண்ணா ! எனக்கு ஓர் உதவி செய்வாயா என்று கோட்டாள்.

8. நிறுத்தற் குறிகள் அறிக:
சரியாக நிறுத்தற்குறியிட்டத் தொடரைத் தேர்ந்தெடு:
a. ‘உங்கள் தந்தையும் அரசரா!" என்றாள் கயல்.
b. "உங்கள் தந்தையும் அரசரா"? என்றாள் கயல்.
c. உங்கள் தந்தையும் அரசரா? என்றாள் கயல்.
d. உங்கள் தந்தையும் அரசரா! என்றாள் கயல்.

9. சரியான இணைப்புச் சொல் அமைந்த வாக்கியத்தை கணடறிக.
a. நேற்று கனமழை பொழிந்தது. ஏனெனில் ஏரி, குளங்கள் நிரம்பின.
b. நேற்று கனமழை பொழிந்தது. அதனால் ஏரி குளங்கள் நிரம்பின.
c. நேற்று கனமழை பொழிந்தது. அதுபோல ஏரி குளங்கள் நிரம்பின.
d. நேற்று கனமழை பொழிந்தது. இருந்தபோதிலும் ஏரி குளங்கள் நிரம்பின.

10. தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாகக் காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன. எவ்வகைத் தொடர்?
a. வினாத்தொடர் b. கட்டளைத்தொடர்
c. செய்தித்தொடர் d. உணர்ச்சித் தொடர்

11. பிழை திருத்தம் - வழுவுச் சொற்களை நீக்குதல்
வழூஉச் சொல்லற்ற தொடர் எது?

a. நீ வந்தேன்
b. நீ வந்தான்
c. நீ வந்தாய்
d. நீ வந்தாள்

12. பொருத்தமான காலம் அமைத்தல்
சரியான இணையைத் தேர்ந்தெடு:

a. படித்தான் - நிகழ்காலம்
b. பார்த்தேன் - இறந்தகாலம்
c. படிப்பேன் - இறந்தகாலம்
d. பார்க்கிறேன் - எதிர்காலம்

13. சரியான தொடரைக் கண்டறிக:

a. செடியில் பூ பூத்திருந்தன
b. காடு செழிப்பாக இருந்தன
c. மாடுகள் புற்களை மேய்ந்தது
d. மான்கள் வேகமாக ஓடின

14. ஒருமை பன்மை பிழையற்ற தொடரைத் தெரிவு செய்க.

a. இவை பூக்கள் அன்று
b. இவை பூ அன்று
c. இவை பூக்கள் அல்ல
d. இவை பூ அல்ல

15. மரபு பிழையற்றதை எடுத்து எழுதுக:

a. சோறு சாப்பிட்டான்
b. பால் குடித்தான்
c. அம்பு விட்டான்
d. கூடை முடைந்தான்

16. மரபு பிழையற்றதை எடுத்து எழுதுக:

a. எருது எக்காளமிடும்
b. கோழி கூவும்
c. மயில் அலறும்
d. காகம் கத்தும்

17. ஒரு பொருள் தரும் பல சொற்கள்.
வடு, மூசு, குரும்பை, கச்சல் ஆகிய சொற்கள் எதனைக் குறிக்கும்?

a. பிஞ்சு வகை
b. காய் வகை
c. கனி வகை
d. குலை வகை

18. சொற்களை ஒழுங்குபடுத்துக:
ஆட்சிக்கு அரசனின் அறம்கூறும் துணை புரிந்தன அறநெறி மன்றங்கள்

a. அறம்கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணை புரிந்தன.
b. அறம்கூறும் அரசனின் ஆட்சிக்கு அறநெறி மன்றங்கள் துணை புரிந்தன.
c. அரசனின் ஆட்சிக்கு அறம் கூறும் அறநெறி மன்றங்கள் துணை புரிந்தன.
d. அரசனின் ஆட்சிக்கு துணை புரிந்தன அறம்கூறும் அறநெறி மன்றங்கள்.

19. செய்வினை, செயப்பாட்டு வினை வாக்கியங்களைக் - கண்டெழுதுதல்
குமரன் ஓவியம் வரைந்தான்

a. செய்வினை வாக்கியம்
b. செயப்பாட்டு வினை வாக்கியம்
c. பிறவினை வாக்கியம்
d. பிறவினை வாக்கியம்

20. பிறவினை சொற்றொடரைக் கண்டறிக

a. கபிலனைத் திருந்தச் செய்தான்
b. கபிலன் திருந்தினான்
c. கபிலன் திருந்துவான்
d. கபிலன் திருந்துவானா?

21. தவறான ஊர்ப்பெயரின் மரூஉவை எழுதுக.

a. தஞ்சை – தஞ்சாவூர் b. நெல்லை – திருநெல்வேலி

c. மயிலை – மயிலாடுதுறை d. புதுகை – புதுக்கோட்டை

22. மரூஉச் சொல் சரியான இணை(களைக) கண்டறிக.

I. சைதை – சைதாப்பேட்டை

II. கும்பை – கும்பகோணம்

III. மயிலை – மயிலாப்பூர்

IV. நெல்லை – திருநெல்வேலி

a. I, II சரி b. III மட்டும் சரி c. I, III, IV சரி d. II, IV சரி

23. சரியான நிறுத்தற்குறிகளையுடைய வாக்கியத்தைக் கண்டறிக.

a. நல்லவை வெல்லும், தீயவைத் தோற்கும்.

b. நல்லவை வெல்லும்! தீயவைத் தோற்கும்!!

c. நல்லவை வெல்லும். தீயவைத் தோற்கும்.

d. நல்லவை வெல்லும்; தீயவைத் தோற்கும்.

24. பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு.
பின்வருவனவற்றுள் எழுத்து வழக்கில் அமைந்த சொல் எது?

a. சொல்லு b. சொல் c. சொல்லிக்கினு d. சொல்றா

25. மீனாட்சி சுந்தரனார் நல்ல தமிழில் பேசி விளக்கும் திறமைப் பெற்றிருந்தார் ________ அவருடைய மாணாக்கர்கள் அவரிடம் கற்பதனை மிகவும் விரும்பினார்கள்.

a. மற்றும் b. ஆகையால் c. அவை போல d. அது போல

26. சால, உறு, தவ, நனி, கூர், கழி – என்ற ஆறு சொற்களும் ஒரே பொருளைத் தரும் அவற்றைக் கண்டறிக.

a. விரைவு b. புதுமை c. மிகுதி d. சிறப்பு

27. பிழை திருத்துல் (ஒரு – ஓர்)
(ஒரு – ஓர் சரியாக அமைந்த தொடரைத் தேர்ந்தெடுக்க)

a. ஒரு அழகிய சிற்றூரில் ஓர் குளம் இருந்தது.

b. ஓர் அழகிய சிற்றூரில் ஓர் குளம் இருந்தது.

c. ஓர் அழகிய சிற்றூரில் ஒரு குளம் இருந்தது.

d. ஒரு அழகிய சிற்றூரில் ஒரு குளம் இருந்தது.

28. சரியான தொடரைத் தேர்ந்தெடு.
பணம் காணாமல் போனது

a. எதிர்மறை வினைத் தொடர் b. செயப்பாட்டு வினைத்தொடர்

c. தன்வினைத் தொடர் d. செய்வினைத் தொடர்

29. நிறுத்தற் குறியிடுக.
ஒரு விரலைக் காட்டிச் சிறியதோ
பெரியதோ என்று கேட்டல்

a. ஒரு விரலைக் காட்டிச் சிறியதோ
பெரியதோ என்று கேட்டல்.

b. ஒரு விரலைக், காட்டிச் 'சிறியதோ?
பெரியதோ'? என்று கேட்டல்.

c. ஒரு விரலைக் காட்டிச் சிறியதோ?
பெரியதோ என்று கேட்டல்.

d. ஒரு விரலைக் காட்டிச் 'சிறியதோ?
பெரியதோ என்று கேட்டல்.

30. “அணி” எனும் சொல் தரும் பலபொருள்களைத் தேர்க

a. அணிகலன், அழகு, வரிசை, அணிதல்
b. சிரிப்பு, நகை, மகிழ்ச்சி, துன்பம்
c. வரிசை, அழகு, சிரிப்பு, அழுகை
d. அழகு, சிரிப்பு, வரிசை, இன்பம்

31. பிழையற்றச் சொல்லைக் கண்டறிக

செழியன் வந்தது
கண்ணகி உண்டான்
நீ வந்தாய்
நேற்று வருகிறான்

a. செழியன் வந்தது
b. கண்ணகி உண்டான்
c. நீ வந்தாய்
d. நேற்று வருகிறான்

32. சரியான இணைப்புச் சொல்லினை எழுது.

நாம் இனியச் சொற்களைப் பேச வேண்டும் ___________ துன்பப்பட நேரிடும்

a. எனவே
b. இல்லையென்றால்
c. ஆகையால்
d. அது போல

33. பேச்சு வழக்கினை எழுத்து வழக்காக மாற்றுக.

அவம்பாட்டியோட வெளியூர் போயிருக்கான்.

a. அவன் பாட்டியுடன் வெளியூர் போய் இருக்கிறான்.
b. அவன் பாட்டியோட வெளியூர் போயிருக்கான்.
c. அவம்பாட்டியுடன் வெளியூர் போயிருக்கான்.
d. அவன் பாட்டி உடன் வெளியூர் போயிருக்கான்.

34. மரபுச் சொற்களின் அடிப்படையில் பின்வருவனவற்றுள் எது சரியானது?

a. ஆட்டுத்தொழுவத்தின் அருகே குயில் கரைவதைக் கேட்டு கழுதை கனைத்தது.
b. ஆட்டுப்பட்டி அருகே குயில் கூவியதைக் கேட்ட கழுதை கத்தியது.
c. ஆட்டுப்பட்டி அருகே குயில் கூவியதைக் கேட்ட கழுதை கனைத்தது.
d. ஆட்டுக்கொட்டில் அருகே குயில் கரைவதைக்கேட்ட கழுதை கத்தியது.

35. மரபுச் சொற்களைப்பொருத்துக:

A. ஈச்சம் — 1. மடல்
B. மூங்கில் — 2. ஓலை
C. வேப்பம் — 3. இலை
D. தாழை — 4. தழை

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 1 | 3 | 2 |
| b. | 3 | 1 | 2 | 4 |
| c. | 4 | 3 | 2 | 1 |
| d. | 2 | 3 | 4 | 1 |

36. பொருத்துக:

A. கருணை — 1. பூமி
B. மாரி — 2. மழை
C. கும்பி — 3. இரக்கம்
D. பூதலம் — 4. வயிறு

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 2 | 1 | 3 |
| b. | 3 | 2 | 4 | 1 |
| c. | 3 | 4 | 1 | 2 |
| d. | 1 | 3 | 2 | 4 |

37. ‘ஔ’’ என்னும் ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருள் யாது?
a. விண் b. பாதாளம் c. சுவர்க்கம் d. பூமி

38. ஓரெழுத்து ஒருமொழி பொருத்துக:

| | | | | |
|---|---|---|---|---|
| A. ஐ | | | 1. இரக்கம் | |
| B. ஔ | | | 2. உணவு | |
| C. ஊ | | | 3. விழித்தல் | |
| D. ஓ | | | 4. தும்பை | |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 2 | 1 |
| b. | 1 | 2 | 3 | 4 |
| c. | 3 | 2 | 4 | 1 |
| d. | 3 | 1 | 2 | 4 |

e. விடை தெரியவில்லை

39. பொருத்துக:

A. வை — 1. இழிவு
B. சா — 2. புல்
C. சீ — 3. இறந்துபோ
D. நோ — 4. வறுமை
E. நை — 5. இகழ்ச்சி

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 2 | 5 | 4 | 3 | 1 |
| b. | 1 | 4 | 3 | 5 | 2 |
| c. | 2 | 3 | 5 | 4 | 1 |
| d. | 5 | 3 | 2 | 1 | 4 |

40. பொருத்துக:

A. யா — 1. அம்பு
B. கா — 2. இறைச்சி
C. ஏ — 3. அன்பு
D. ஊ — 4. அகலம்
E. நே — 5. சோலை

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 5 | 3 | 4 |
| b. | 2 | 3 | 4 | 5 | 1 |
| c. | 5 | 4 | 2 | 1 | 3 |
| d. | 4 | 5 | 1 | 2 | 3 |

41. பொருத்துக:

A. சிங்கம் கனைத்தது — 1. எண்வழு
B. கண்ணன் படித்தாள் — 2. காலவழு
C. இன்று வருவான் — 3. திணைவழு
D. கபிலன் பேசியது — 4. மரபுவழு
E. பறவைகள் பறந்தது — 5. பால்வழு

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 4 | 5 | 2 | 3 | 1 |
| b. | 1 | 3 | 5 | 4 | 2 |
| c. | 5 | 4 | 3 | 1 | 2 |
| d. | 4 | 2 | 1 | 5 | 3 |

42. சரியான நிறுத்தற்குறியிட்ட தொடரை தேர்ந்தெடு.
a. “ஒழுக்கமுடைமை குடிமை” என்றார் திருவள்ளுவர்.
b. ‘ஒழுக்கமுடைமை குடிமை’ என்றார் திருவள்ளுவர்.
c. “ஒழுக்கமுடைமை” ‘குடிமை’ என்றார் திருவள்ளுவர்.
d. ‘ஒழுக்கமுடைமை குடிமை’ என்றார், திருவள்ளுவர்.

43. தனிவாக்கியம் குறித்து கீழ்க்கண்டவற்றுள் சரியானது எது?
a. வினாப் பொருள் தரும் வாக்கியம்.
b. ஓர் எழுவாய் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எழுவாய்கள்.
c. தனி வாக்கியங்கள் பல தொடர்ந்து வரும்.
d. ஒரு முதன்மை வாக்கியம் ஒரு துணை வாக்கியத்துடன் சேர்ந்து வரும்.

44. வாக்கியங்களைக் கவனி:
கூற்று (A): எ.கா “நான் புத்தகம் கொண்டு வருகிறேன்” என்று பவானி, காயத்ரியிடம் கூறினாள்.
காரணம்(R): ஒருவர் கூறியதை அப்படியே கூறுவது மேற்கோள் குறியீடு இடம் பெறும், தன்மை, முன்னிலைப் பெயர்கள் இடம்பெறும் என்பது நேர்க்கூற்று ஆகும்.
a. இவற்றுள் A மற்றும் R இரண்டும் சரி, மேலும் R என்பது A விற்கு சரியான விளக்கமல்ல.
b. இவற்றுள் A தவறு ஆனால் R சரி.
c. இவற்றுள் A சரி ஆனால் R தவறு.
d. இவற்றுள் A மற்றும் R இரண்டும் சரி, மேலும் R என்பது A விற்கு சரியான விளக்கம்.

45. செயப்பாட்டு வினைச்சொற்றொடரைக் கண்டறிக.
a. வ.உ.சி. தொல்காப்பியத்ததைப் பதிப்பித்தார்.
b. தொல்காப்பியம் வ.உ.சி. யால் பதிப்பிக்கபட்டது.
c. பதிப்பித்தார் தொல்காப்பியத்ததை வ.உ.சி.
d. வ.உ.சி பதிப்பித்தது தொல்காப்பியம்.

46. வாக்கிய அமைப்பினைக் கண்டறிதல்.
பள்ளிக்கல்வி இயக்குநர் அறிவியல் கண்காட்சியைத் தொடங்கி வைத்தார் - எவ்வகை வாக்கியம் எனச் சுட்டுக.
a. தனி வாக்கியம் b. கலவை வாக்கியம்
c. செயப்பாட்டு வினை வாக்கியம் d. பிறவினை வாக்கியம்

47. இனத்தில் சேராத ஒன்றைச் சுட்டுக:
a. வங்கம் b. திமில் c. பௌவம் d. கலம்

48. பொருத்துக:

| சொல் | பொருள் |
|---|---|
| A. களபம் | 1. அம்பு |
| B. புயம் | 2. பெயர் |
| C. நாமம் | 3. சந்தனம் |
| D. பகழி | 4. தோள் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |
| b. | 2 | 3 | 4 | 1 |
| c. | 3 | 4 | 2 | 1 |
| d. | 4 | 2 | 1 | 3 |

49. பொருளொடு பொருத்தமான விளையை இணைக்க:

A. கூரை — 1. வனைந்தான்
B. ஓலை — 2. கொய்தான்
C. பானை — 3. முடைந்தான்
D. தேங்காய் — 4. வேய்ந்தான்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 1 | 2 |
| b. | 4 | 3 | 2 | 1 |
| c. | 3 | 4 | 1 | 2 |
| d. | 3 | 4 | 2 | 1 |

50. உழூஉச் சொற்களற்ற வாக்கியத்தைத் தேர்வு செய்க:
a. ஒருத்தி புட்டு வித்து சிலவு செய்தாள்.
b. ஒருத்தி புட்டு விற்று செலவு செய்தாள்.
c. ஒருத்தி பிட்டு வித்து சிலவு செய்தாள்.
d. ஒருத்தி பிட்டு விற்றுச் செலவு செய்தாள்.

51. எவ்வகை வாக்கியம் எனக் கண்டறிக:
'தமிழக அரசு சிறந்த கலைஞர்களைக் கௌரவிக்கிறது'
a. செயப்பாட்டு வாக்கியம் b. தொடர் வாக்கியம்
c. கலவை வாக்கியம் d. செய்வினை வாக்கியம்

52. யாப்பு என்றால் ______________ என்பது பொருள்.
a. அடித்தல் b. சிதைத்தல் c. கட்டுதல் d. துவைத்தல்

53. வெற்பு, சிலம்பு, பொருப்பு – ஆகிய சொற்கள் குறிக்கும் பொருள்
a. நிலம் b. மலை c. காடு d. நாடு

54. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுதல்:
வேடன் சிங்கத்தை வீழ்த்தினான்.
a. தனிவாக்கியம் b. தொடர் வாக்கியம்
c. எதிர்மறை வாக்கியம் d. கலவை வாக்கியம்

55. கீழ்காணும் மரபுப் பிழையற்ற சொற்றொடர்களைக் கண்டறிக.
1. திராட்சைக் கொத்து 2. யானைக் கூட்டம்
3. யானைக் கூடம் 4. பூந்தோட்டம்
5. கோலம் போடு 6. தீ மூட்டு
7. ஆடு கத்தும் 8. பால் குடித்தான்
9. நெற்று என்பது முற்றிய தேங்காய்
a. இரண்டு சொற்றொடர்கள் b. நான்கு சொற்றொடர்கள்
c. ஆறு சொற்றொடர்கள் d. எட்டு சொற்றொடர்கள்

56. அகர வரிசையில் சரியாக அமைந்த அமைப்பினைத் தேர்வு செய்க.
a. தங்கம், தஞ்சம், தஞ்சை, தரம், தடை b. உண்மை, உதை, உப்பு, உப்பளம்
c. வரம், வலி, வலிமை, வலியறிதல் d. மன்னன், மன்னிப்பு மனம், மனை

57. தவறான இணைகளைக் கண்டறிக.
1. ராமன் உணவு உண்டான் - உடன்பாட்டு வாக்கியம்
2. இனியன் உணவு உண்டிலன் - எதிர்மறை வாக்கியம்
3. "தாய் மகனைப் பார்த்து மணி அடித்து விட்டது. பள்ளிக்கு உடனே செல்" என்றார் - அயர் கூற்று வாக்கியம்

a. 3 b. 1 c. 2 d. எதுவுமில்லை

58. தவறான இணைகளைக் கண்டறிக.
1. இலை மறை காய் போல – ரகசியம்
2. வளர்பிறை போல – தேயாமை
3. தாமரை இலை தண்ணீர் போல – ஒற்றுமை
4. அடியற்ற மரம் போல – வீழ்தல்

a. 1, 2 b. 2, 3 c. 3, 4 d. 1, 3

59. எவ்வகை வாக்கியம் எனக் கண்டறிக.
"கண்ணகி கட்டுரை எழுதாமல் இராள்"

a. உடன்பாட்டு வாக்கியம் b. எதிர்மறை வாக்கியம்
c. பொருள் மாறா எதிர்மறை வாக்கியம் d. கலவை வாக்கியம்

60. சரியான தொடரைத் தேர்ந்தெடு:
நான் மழையில் நனைந்தேன்

a. உணர்ச்சித் தொடர் b பிறவினைத் தொடர்
c. உடன்பாட்டுத் வினைத் தொடர் d. பெயர்ப் பயனிலைத் தொடர்

61. துன்பு உளது எனின் அன்றோ சுகம் உளது' – என்ற கூற்றிற்கு பொருத்தமான பழமொழி

a. காலம் பொன் போன்றது b. நிழலின் அருமை வெயிலில் தெரியும்
c. இக்கரைக்கு அக்கறை பச்சை d. வருமுன் காப்பதே சிறப்பு

62. தன்வினை வாக்கியத்தை தோந்தெடுக்க:

a. மாணவன் மனம் திருத்தப்பட்டது. b. மாணவான் மனம் திருந்தினான்.
c. மாணவன் மனம் திருந்தினானா? d. மாணவன் மனம் திருந்தச் செய்தான்.

63. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுக்க
1. கிணறு வெட்டப்பூதம் கிளம்பியது போல – நிலையின்மை
2. காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்தது போல - தற்செயல் நிகழ்வு
3. சிலை மேல் எழுத்து போல – நிலைத்து நிற்றல்
4. இலவுகாத்த கிளி போல – பொறுமை

a. 1, 2 மற்றும் 3 சரி b. 2, 3 மற்றும் 4 சரி
c. 2 மற்றும் 3 சரி d. 1, 2 தவறு

64. மரபுப் சொற்களை பொருத்துக:

A. கிளி 1. கூவும்
B. மயில் 2. பேசும்
C. ஆந்தை 3. அகவும்
D. சேவல் 4. அலறும்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 4 | 3 | 1 |
| b. | 2 | 3 | 4 | 1 |
| c. | 3 | 2 | 1 | 4 |
| d. | 3 | 1 | 4 | 2 |

65. வழூஉச் சொற்களற்ற வாக்கியங்களைத் தேர்வு செய்க?
1. அருவாமனையின் அருகில் அண்ணாக்கயிறு இருந்தது.
2. அவரைக்காய் மற்றும் சிகைக்காய் வாங்கினேன்
3. தாழ்வாரத்தில் துடைப்பம் இருந்தது.
4. நஞ்சை நிலத்தில் வேர்வை சிந்தி உழைத்தான்

a. 1 மற்றும் 2 b. 2 மற்றும் 3 c. 3 மற்றும் 4 d. 1 மற்றும் 4

66. பொருளுக்கு ஏற்ற பொருத்தமான உவமையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:
உலக நிலைகளை அறியாதிருத்தல்

a. கீரியும் பாம்பும் போல
b. இலவு காத்த கிளி போல
c. கிணற்றுத் தவளை போல
d. அனலிடைப்பட்ட புழு போல

67. பொருத்துக:

A. து 1. புல்
B. வை 2. உண்
C. வெள 3. கவர்
D. நை 4. இழிவு

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 1 | 2 |
| b. | 4 | 1 | 3 | 2 |
| c. | 1 | 2 | 3 | 4 |
| d. | 2 | 1 | 3 | 4 |

68. சொற்களை ஒழுங்குபடுத்தி சரியான சொற்றொடர்களாக அமைந்தவற்றைத் தேர்வு செய்க.

a. யானை வரும் பின்னே மணியோசைவரும் முன்னே
b. மணியோசை வரும் முன்னே யானை வரும் பின்னே
c. வரும் மணியோசை முன்னே பின்னே வரும் யானை
d. பின்னே யானை வரும் மணியோசை வரும் முன்னே

69. பொருத்துக:

A. அரைலிட்டர் வாங்கு 1. எண்ணலளவை ஆகு பெயர்
B. ஒன்று பெற்றால் ஒளிமயம் 2. பண்பாகு பெயர்
C. மஞ்சள் பூசினாள் 3. முகத்தலளவை ஆகுபெயர்
D. பைங்கூழ் வளர்ந்தது 4. காரிய வாகு பெயர்
E. மேடை மகிழ்ந்தது 5. இடவாகு பெயர்

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 5 | 2 | 1 | 3 | 4 |
| b. | 3 | 2 | 1 | 4 | 5 |
| c. | 3 | 1 | 2 | 4 | 5 |
| d. | 1 | 2 | 3 | 5 | 4 |

70. பொருத்துக:

A. பூக்களைப் பறிக்காதீர் 1. செய்வினைத் தொடர்
B. கவிதா உரை படித்தாள் 2. செயப்பாட்டு வினைத் தொடர்
C. தோசை வைக்கப்பட்டது 3. தன்வினைத் தொடர்
D. அவர்கள் நன்றாகப் படித்தனர் 4. கட்டளைத் தொடர்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 1 | 2 | 3 |
| b. | 1 | 2 | 3 | 4 |
| c. | 4 | 1 | 3 | 2 |
| d. | 1 | 4 | 2 | 3 |

71. மரபுப் பிழையற்ற சரியான தொடர்களைத் தேர்வு செய்க.
1. என் தாய் காய்ந்த குச்சுகளை எடுத்து வந்து உணவு சமைத்தாள்.
2. காலைப் பொழுதில் தோன்றிய முல்லையின் அரும்பு மாலையில் மலர்ந்து மணம் வீசியது.
3. மாலைத் தென்றலில் நெல் தாள்களும் கரும்புத் தோகைகளும் அசைந்து ஆடின.
4. மாம்பிஞ்சு ஊறுகாய் சுவையாக இருக்கும்.

a. (1), (3) -ம் சரி  b. (1), (4) -ம் சரி
c. (1), (2), (3), (4) -ம் சரி  d. (2), (3) -ம் சரி

72. உவமைத் தொடரின் பொருத்தமான பொருளைத் தேர்ந்து எழுதுக.
“அறிஞர் அண்ணாவின் மேடைப்பேச்சு மடை திறந்த வெள்ளம் போல அமைந்துள்ளது?

a. தெளிவற்ற பேச்சு  b. குழப்பமான பேச்சு
c. தெளிவான, சீரான பேச்சு  d. கலக்கம் நிறைந்த பேச்சு

73. சரியானவற்றைக் கண்டறிக.
1. “எம் அம்மை வந்தாள்” – என்று மாட்டைப் பார்த்துக் கூறுவது – பால் வழுவமைதி
2. இச்செயலைச் செய்தது மங்கையா? மணி மேகலையா? – ஐய வினா
3. ஆலத்து மேல குவளை குளத்துள
வாலின் நெடிய குரங்கு – கொண்டு கூட்டுப் பொருள்கோள்

a. 1 மட்டும் 2  b. 2 மட்டும்  c. 2 மற்றும் 3  d. 3 மட்டும்

74. குறில், நெடில் வேறுபாடு அறிந்து அதற்குரிய எதிர்ச்சொல்லைத் தேர்ந்தெடு:
கொடு - கோடு

a. கொடுத்தல் - நேராக வரைதல்  b. ஈதல் - நேராக வரைதல்
c. வாங்குதல் - வளைவாக வரைதல்  d. ஈதல் - மலை

75. அடைப்புக் குறிக்குள் உள்ள சொற்கள் பொருந்தக் கூடிய தொடரைக் கண்டறிக.
(பட்டு – பாட்டு)

a. கவலைப்பட்ட வாழ்விற்குப் பாட்டு அவசியம்.
b. தூண்டிலில் பட்ட மீனைப் பாட்டு பாடி இழுத்தான்.
c. பட்டு மெத்தையில் பாட்டுக் கேட்டபடி தூங்கினாள்.
d. துன்பப்பட்டு வாழும் வாழ்வில் பாட்டுக்கு என்ன வேலை?

76. பொருள் வேறுபாடு அறிக.
புரம், புறம், விரல், விறல்

a. நகர், வெளி, கைவிரல், பக்கம்  b. வெளி, நகர், வெற்றி, பக்கம்
c. நகர், வெளி, கைவிரல், வெற்றி  d. பக்கம், நகர், கைவிரல், காளை

77. துரிஞ்சில் என்ற சொல் தரும் வேறு பொருள்களைத் தேர்வு செய்க.

a. வெளவால், உசில மரம்  b. தோட்டம், காடு
c. உள்ளம், இடம்  d. அழகு, நகை

78. பிறமொழிச் சொல்லற்ற தொடரைத் தேர்ந்தெடு:
a. நான் அன்று சம்மதித்தேன்.
b. எனக்கு சந்தேகம் இருக்கிறது.
c. பாரதியார் கேலிசித்திரம், பற்றி இந்தியா இதழில் குறிப்பிட்டார்.
d. படைத்தலைவன் தலைமையில் போர் நடைபெறுகிறது.

79. எதிர்கால பெயரெச்சம்
பொருந்தாததை தேர்வு செய்
a. படிக்கும் மாணவன் b. சென்று பார்ப்பான்
c. காக்கும் செயல் d. நாளை உண்பான்

80. கோடிட்ட இடத்தில் பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுக்க.
செங்கீரைப் பருவம் பிள்ளைத் தமிழின் __________ பருவம் ஆகும்.
a. இரண்டாவது b. மூன்றாவது c. நான்காவது d. ஐந்தாவது

81. "முகவை" என்பது எந்த ஊரின் மரூஉ பெயர்
a. ராமநாதபுரம் b. சிவகங்கை c. முண்டந்துறை d. முகப்பேறு

82. "சோறு" என்பதனை குறிக்கும் சொற்களில் கீழ்கண்டவற்றில் பொருந்தாதது எது?
a. வல்சி b. மூரல் c. அமலை d. தேறல்

83. மாறுபட்ட சுட்டெழுத்தை தேர்வு செய்?
a. அம்மரம் b. இம்மரம் c. அவ்வீடு d. அந்த வீடு

84. வினா எழுத்துக்கள் எத்தனை?
a. ஆறு b. ஐந்து c. நான்கு d. மூன்று

85. "பரவசம்" அயற்சொல்லுக்குரிய தமிழ்சொல் என்ன?
a. மகிழ்ச்சி b. சந்தோஷம்
c. மெய்திறத்தல் d. மெய்மறத்தல்

86. நிகழ்கால வினையெச்சம்
(பொருந்தாததை தேர்வு செய்)
a. படிக்கின்ற மாணவன் b. படித்து வருகின்றான்
c. நடந்து செல்கின்றான் d. வந்து பார்க்கின்றான்

87. இனை - இணை வேறுபாடு அறிக.
a. மகிழ்ச்சி – பொருத்தம் b. மகிழ்ச்சி - இணைதல்
c. துன்புறுதல் - பொருத்தம் d. சேர்த்தல் - பொருத்துதல்

88. "அபாண்டம்" பிறமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல்
a. வீண்பழிக்கூற்று b. பொய் c. பழிசாற்றுதல் d. வீண்பேச்சு

89. கோடிட்ட இடத்தில் சரியான சொல்லைத் தேர்ந்தெடு:
ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்ப்பாட்டில் முடியும் பாவகை __________.
a. வெண்பா b. ஆசிரியப்பா c. வஞ்சிப்பா d. கலிப்பா

90. 'ஒகேனக்கல்' – மரூஉச் சொல்
a. உகுநீர்கல் b. ஒகுநீர்கல் c. புகுநீர்கல் d. காவிரிக்கல்

91. சொற்களை ஒழுங்குபடுத்துக:

a. தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் கலையாகத் திகழ்வது புலியாட்டமாகும்.

b. தமிழ் வீரத்தைச் சொல்லும் மக்களின் கலையாகத் திகழ்வது புலியாட்டமாகும்.

c. வீரத்தைச் சொல்லும் மக்களின் தமிழ் கலையாகத் திகழ்வது புலியாட்டமாகும்.

d. வீரத்தைச் சொல்லும் மக்களின் கலையாகத் திகழ்வது தமிழ் புலியாட்டமாகும்.

92. மரபுச் சொற்களை பொருத்துக:

| | |
|---|---|
| A. ஓவியம் | 1. எழுதினான் |
| B. நீர் | 2. பாய்ச்சினான் |
| C. வெற்றிலை | 3. புனைந்தான் |
| D. அப்பம் | 4. மென்றான் |
| E. கட்டுரை | 5. தின்றான் |

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 3 | 2 | 5 | 4 | 1 |
| b. | 3 | 2 | 4 | 5 | 1 |
| c. | 4 | 5 | 3 | 1 | 2 |
| d. | 2 | 3 | 4 | 5 | 1 |

93. சரியான நிறுத்தற்குறியிட்ட சொற்றொடரைத் தேர்ந்தெடு.

a. கம்பர், 'கம்பராமாணயம் என்னும் காவியம் படைத்தார்'.

b. 'கம்பர்', 'கம்பராமாயணம் என்னும் காவியம் படைத்தார்'.

c. கம்பர், "கம்பராமாயணம்" என்னும் காவியம் படைத்தார்.

d. கம்பர், "கம்பரமாயணம்" என்னும் 'காவியம்' படைத்தார்.

94. ஒருமைப் பன்மைப் பிழையற்ற தொடர் எது?

a. மூவேந்தர்கள் குறித்த செய்திகள் இடம் பெற்றுள்ளன.

b. தொண்டி, முசிறி, காந்தளூர் என்பன சேர நாட்டின் துறைமுகப் பட்டினங்களாக விளங்கியது.

c. சேரர்களின் நாடு குடநாடு எனப்பட்டன.

d. தொல்காப்பியமும், சங்க இலக்கியங்களும், சேர, சோழ, பாண்டியர்களுக்கு உரியதாகக் கூறுகின்றுத

95. கீழ்கண்டவற்றுள் பொருந்தாததைத் தேர்ந்தெடு:
அயற்கூற்றில் வருவன

a. மேற்கோள் குறிகள் வராது.

b. தன்மை, முன்னிலைப் பெயர்கள் படர்க்கைப் பெயர்களாக மாறாது.

c. அது, அவை – அங்கே என மாறும்.

d. காலப் பெயர்கள், அந்நாள், மறுநாள் என மாறும்.

96. சரியானதை தேர்ந்தெடு:

a. எருமைக்குட்டியுடன் மான்கன்று துள்ளியது.

b. புலிப்பறழ் ஒன்று மான்மறியை துரத்தியது.

c. சிங்கக் குருளையுடன் யானைக்குட்டி விளையாடியது.

d. தவளை கத்த, கழுதை கனைத்தது.

97. "குரங்கினுள் நன்முகத்த தில்" - இப்பழமொழி உணர்த்தும் பொருள்

a. நீசருள் பண்புடையார் தோன்றார்

b. இரப்பார்க்கு உதவாத பொருள்

c. பணக்காரனுக்கு விருந்து

d. படியாமலே வரும் அறிவு

98. “குன்றின் மேல் இட்ட விளக்கு” - இப்பழமொழி உணர்த்தும் பொருள்
a. நிலையாமையை அறிதல்
b. உயர்ந்தோரின் சிறு குற்றம்
c. நல்ல குடியினர் எவர்?
d. கொடுப்பவன் கெடுவதில்லை

99. உவமையால் விளக்கப்படும் பொருள்
பூட்கையில்லோன் யாக்கை போல
a. குறிக்கோளின்மை
b. சான்றான்மை
c. வெறுப்பை வளர்த்தல்
d. இறுகப் பற்றிக் கொள்ளுதல்

100. ஆழிப்பேரலை என பொருள் தரும் “சுனாமி” என்ற சொல் எம்மொழியில் இருந்து பெறப்பட்டது.
a. சமஸ்கிருதம்
b. ஜப்பான்மொழி
c. பிரெஞ்சுமொழி
d. போர்த்துக்கீசிய மொழி

APPOLO STUDY CENTRE

# பொதுத்தமிழ் - அலகு 4, 5, 6

1. தவறான இணையைத் தேர்ந்தெடுக்க:
   a. அலகலகாக - தனித்தனியாய்
   b. அல்லோல கல்லோலம் - ஆரவாரம்
   c. அள்ளித்துள்ளுதல் - மிகச்செருக்குதல்
   d. ஆக்கங் கூறுதல் - உருவாக்குதல்

2. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொல். நீவு
   a. நீண்ட b. நீ c. நீர் d. நீலம்

3. 'குத்துக்கல்லுக்கு குளிரா வெயிலா''
   பழமொழிக்குரிய பொருள் எழுதுக.
   a. அனுபவம் மூலம் அறிதல் b. கவலையில்லாமல் இருத்தல்
   c. தன்னிலை அறிதல் d. சோர்வோடு அலைதல்

4. பொருத்துக:
   A. Fanfare 1. இணக்கமுள்ள
   B. Fangle 2. வீட்டுப்புறா
   C. Fantail 3. எக்காள முழக்கம்
   D. Facile 4. நாகரிகம்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 4 | 2 | 1 |
| b. | 4 | 1 | 3 | 2 |
| c. | 2 | 3 | 4 | 1 |
| d. | 1 | 4 | 2 | 3 |

5. தவறான இணையைத் தேர்க:
   a. கட்டாக்கடி - விடாப்பிடி
   b. கட்டிவிடுதல் - பொய் சொல்லுதல்
   c. கட்டுக்கதை - பொய்க்கதை
   d. கட்டு முட்டு - பொறாமை

6. தவறான பொருத்தம் எது:
   a. வருமம் - தீராப் பகை
   b. வறுமம் - வெறுமையற்ற தன்மை
   c. வருமொழி - வந்து சேரும் சொல்
   d. வறுமொழி - பயனிற் சொல்

7. பொருத்துக:
   A. உலம்புதல் 1. ஆரவாரம்
   B. உழம்புதல் 2. பல ஒலிகளைக் கலந்தொலித்தல், குழம்புதல்
   C. உளம்புதல் 3. ஓலமிடுதல்
   D. உளர் 4. வாழ்கின்றார்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |
| b. | 4 | 3 | 2 | 1 |
| c. | 1 | 4 | 3 | 2 |
| d. | 1 | 3 | 2 | 4 |

8. சட்டவியலில் 'Diploma' -என்னும் ஆங்கிலச் சொல்லிற்கு கலைச்சொல் தருக.
a. மாணாக்கர் b. பட்டயம் c. மதிப்பீடு d. வருவாய்த்துறை ஆண்டு

9. "குடுகுடுப்பு" – எனும் மரபுத் தொடரின் பொருள் தேர்க.
a. பரபரப்பு b. தடுமாறுதல் c. மயக்கமாதல் d. சந்து சந்தாய்

10. 'அன்னநடை கற்கப்போய்த் தன்நடையும் இழந்தாற் போல' – உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமானப் பொருளைத் தேர்ந்தெடுக்க.
a. தவிப்பு b. இழப்பு c. குவிப்பு d. வலிப்பு

11. "அடுப்பின் கடைமுடங்கும் நாயைப் புலியாம் எனல்" என்ற பழமொழி உணர்த்தும் பொருள்.
a. கோழைக்குப் பாதுகாப்பே கிடையாது. b. கொடியவன் பார்க்கமாட்டான்.
c. தருமம் செய்யுங்கள். d. குடிப் பெருமையின் சிறப்பு.

12. 'ஓட்டை சாட்டை" – எனும் மரபுத் தொடரின் பொருள் தேர்க.
a. பெருஞ் செலவாளி b. பயனற்றது
c. சிதைந்த பண்டங்கள் d. பெருமுயற்சி எடுத்தல்

13. 'ஈ ஆடவில்லை' – எனும் மரபுத் தொடரின் பொருள் தேர்க.
a. உறுதியின்மை b. மனக்கசிவு c. மிகுந்த கவலையாய் d. பணமோசம்

14. "கானகத்து உக்க நிலா" என்ற பழமொழி உணர்த்தும் பொருள்.
a. கல்வியை நாளும் கற்க b. துறவிகள் புலால் விரும்புதல்
c. நல்லபடி நடவாத நண்பர் d. வலிமை அறிந்து எழுதல்

15. "அளப்பறிதல்" – எனும் மரபுத் தொடரின் பொருள் தேர்க.
a. அலப்புதல் b. உட் கருத்தைத் தந்திரமாயறிதல்
c. முறு முறுத்தல் d. வீண் வழக்கு

16. "Do in Rome as Romans do' – என்பதற்கு இணையான தமிழ்ப் பழமொழி.
a. அரசன் எவ்வழிகுடிமக்கள் அவ்வழி b. அத்தி பூத்தார் போல்
c. ஊரோடு ஒத்து வாழ் d. பாம்பின் கால் பாம்பறியும்

17. "இரண்டுங் கெட்டான்" – எனும் மரபுத் தொடரின் பொருள் தேர்க.
a. இரு பொருள்படப் பேசுதல் b. பொய்யும் தீங்கு விளைவிப்பதும்
c. பகைவரும் நண்பரும் d. நன்மை தீமை அறியாதவன்

18. "இன்னாது இருவர் உடனாடல் நாய்" எனும் பழமொழியின் பொருள் கண்டறிக.
a. ஒருவனை எதிர்க்க இருவர் b. இனிமையாகவே பேசுக
c. கொடுக்கக் கொடுக்கப் பெருகும் d. கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே

19. கலைச்சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல் தருக.
Aerobe
a. புதைஉயிர்ப் படிவம் b. கழிவுப்பொருள் அறிவியல்
c. காற்றுயிரி d. பொரித்தல்

20. பழிமொழியை நிறைவு செய்க.
பனங்காட்டு __________ சல சலப்புக்கு அஞ்சாது.
a. நரி b. புலி c. சிங்கம் d. யானை

21. 'Revivalism' – என்ற சொல்லுக்குரிய தமிழ்ச்சொல்லை எழுதுக.
a. மறுமலர்ச்சி b. காப்புரிமை c. நம்பிக்கை d. மீட்டுருவாக்கம்

22. கலைச்சொல் அறிக : 'Cyber Space'
a. பூஜ்யவெளி b. சமவெளி c. இணையவெளி d. வையகவிரிவுவலை

23. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொல்லைத் தெரிவு செய்க.
'அக்கசாலை'
a. மற்போர் பயிற்சிக்களம் b. பார்ப்பனச்சேரி
c. கோயிலின் முக மண்டபம் d. மாழைப் பணியகம்

24. 'பதில்' என்பது எம்மொழிச் சொல்?
a. தெலுங்கு b. சமஸ்கிருதம் c. உருது d. தமிழ்

25. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொல் அறிக. 'மகாநாதம்'
1. சங்கு 2. சிங்கம் 3. யானை 4. பேரொலி
a. 1,2 மற்றும் 3 சரி b. 1 மற்றும் 2 சரி
c. 2 மற்றும் 4 சரி d. அனைத்தும் சரி

26. அவசரக் குடுக்கை என்ற உவமையின் பொருளை எழுதுக.
a. விரைந்து வெளியேறுதல் b. எண்ணி செயல்படாமை
c. இயலாத செயல் d. நீண்டகாலமாக இருப்பது

27. பொருத்துக:
A. Editorial 1. செய்தித்தாள் வடிவமைப்பு
B. Bulletin 2. தலையங்கம்
C. Green proof 3. சிறப்புச் செய்தி இதழ்
D. layout 4. திருத்தப்படாத அச்சுப்படி

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 3 | 4 | 1 |
| b. | 3 | 4 | 2 | 1 |
| c. | 1 | 2 | 3 | 4 |
| d. | 4 | 3 | 2 | 1 |

28. பொருத்துக:
A. EVOKE 1. வெளிப்படு
B. EVOLVE 2. அகற்று
C. EVINCE 3. அழை
D. EVICT 4. நிரூபி

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 2 | 1 | 4 |
| b. | 3 | 1 | 4 | 2 |
| c. | 2 | 4 | 3 | 1 |
| d. | 2 | 3 | 4 | 1 |

29. "ஆவணகம்" என்னும் பொருள் தரும் ஆங்கில சொல்லைத் தேர்க.
a. Achieve b. Diction c. File d. Agreement

30. "Encoding" என்ற ஆங்கிலச் சொல்லுக்கு பொருத்தமான தமிழ் சொல்லைக் கண்டறிக?
a. எழுந்துரு b. விசைப்பலகை c. குறியேற்றம் d. தட்டச்சு இடமுகச் செயலி

31. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்தல்?
'ஆறப்போடுதல்'' – தொடர் கூறும் பொருள் தெளிக.
a. தாமதித்தல் b. ஏமாற்றம் c. தவித்தல் d. போற்றுதல்

32. பின்வரும் மரபுத் தொடரைப் பொருளோடு பொருத்துக:
''கல்லில் நார் உரித்தல்''
a. ஆராய்ந்து பார்த்துச் செய்தல் b. இயலாத செயல்
c. நீண்டகாலமாக இருப்பது d. விரைந்து வெளியேறுதல்

33. மரபுத் தொடரை உரிய பொருளோடுப் பொருத்துக:
A. ஆயிரம் காலத்துப் பயிர் 1. எண்ணித் செயல்படாதார்
B. கானல் நீர் 2. பொய்யழுகை
C. முதலைக்கண்ணீர் ஆனால் இராது 3. இருப்பதுபோல் தோன்றும்
D. அவசரக்குடுக்கை 4. நீண்ட காலத்திற்குரியது

| | A | B | C | F |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |
| b. | 2 | 1 | 3 | 4 |
| c. | 1 | 2 | 4 | 3 |
| d. | 4 | 3 | 2 | 1 |

34. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெழுதுதல்.
''காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்தது போல''
a. எதிர்பாரா நிகழ்வு b. தற்செயல் நிகழ்வு
c. ஒற்றுமையின்மை d. பயனற்ற செயல்

35. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை அறிக.
a. Literacy - கல்வியறிவு
b. Guidance - நீதி
c. child Labour - தொழில் வரி
d. Discipline - வழிகாட்டி

36. சரியான கலைச் சொல்லைத் தெரிவு செய்க.
Nanotechnology என்ற ஆங்கிலச் சொல்லுக்குச் சரியான கலைச் சொல்லைத் தெரிவு செய்க.
a. நுண் உயிரித் தொழில் நுட்பம் b. உயிரித் தொழில் நுட்பம்
c. விண்வெளித் தொழில் நுட்பம் d. மீநுண் தொழில் நுட்பம்

37. பிறமொழிச் சொற்கள் கலவாத தொடரை எடுத்து எழுது.
a. திருவிழாவிற்கு முக்கியஸ்தர் வருகை புரிந்தார்.
b. திருவிழாவிற்கு பிரதானமானவர் வருகை புரிந்தார்
c. திருவிழாவிற்கு உத்தியோகஸ்தர் வருகை புரிந்தார்
d. திருவிழாவிற்கு முதன்மையானவர் வருகை புரிந்தார்.

38. ''புலிப்புறத் துண்பார் உணா''
a. இரப்பவர் அழிவார் b. இகழ்பவர் அழிவார்
c. கொடுப்பவர் வாழ்வார் d. போற்றுபவர் வாழ்வார்

39. பழமொழியுடன் பொருளை பொருத்தியபின் எது தவறாக உள்ளது?

1) பாம்புக்கு பால் ஊட்டி வளர்த்தால் போல் - நம்பி ஏமாறுதல்
2) பசுத்தோல் போர்த்திய புலி போல - வஞ்சகம்
3) இருதலைக்கொள்ளி எறும்பைப் போல - தவிப்பு
4) அரசனை நம்பி புருசனை கைவிட்ட போல - நம்பிக்கை

a. 4 மட்டும் b. 2 மற்றும் 3 c. 1 மற்றும் 4 d. 1, 2, 3

40. "மதில் மேல் பூனை" – உணர்த்தும் மரபுப் பொருள்?

a. குழப்பத்தில் இருத்தல் b. நிலையில்லாமல் இருத்தல்
c. விடாப்பிடியாக இருத்தல் d. பற்றின்றி இருத்தல்

41. "தோளிருக்கச் சுளை விழுங்கி" – மரபு தொடர்

a. புத்தியுள்ளவன் b. புத்தியற்றவன்
c. ஆத்திரக்காரன் d. எண்ணி துணியாதார்

42. "மனக்கோட்டை கட்டுதல்" – மரபுபொருள்

a. வீண் செயல் b. வீண் எண்ணம்
c. பயனற்ற தன்மை d. அடையமுடியாத ஒன்று

43. "புளிப்புத் தட்டுதல்" – மரபுப்பொருள்

a. திரும்பப் பெறுதல் b. பிடிக்காமல் போதல்
c. அவமானம் ஏற்படுத்துதல் d. மதிப்பு பெறாமை

44. "பறைக்கண் கழப்பிடு மாறு"

a. உறவினர் மேன்மை b. உள்ளத்து மாண்பற்றார்
c. பழம்பகை நட்பாதல் இல் d. வாய்ப் பேச்சு உதவியாகுமா?

45. பொருத்துக:

A. கயிறு திரித்தல் — 1. பொய் அழுகை
B. ஓலை கிழிந்தது — 2. விடாப்பிடி
C. முதலைக் கண்ணீர் — 3. இல்லாததை சொல்லுதல்
D. குரங்குப் பிடி — 4. மறைந்து போதல்
E. சிலை மேல் எழுத்து — 5. வேலை போய் விட்டது
6. நிலையாக இருத்தல்

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 3 | 5 | 1 | 2 | 6 |
| b. | 3 | 5 | 1 | 2 | 4 |
| c. | 5 | 3 | 2 | 1 | 4 |
| d. | 4 | 2 | 5 | 6 | 3 |

46. "உரைமுடிவு காணுன் இளமையோன்" என்ற பழமொழி நானூற்றுப் பாடல் உணர்த்தும் செய்தி?

a. குலத்தின் வளர்ச்சி b. குலவித்தை கல்லாமலே அமையும்
c. இளமையில் முதுமை சிறப்பு d. கற்றாரே கற்றர் அறிவர்

47. "மரங்குறைப்ப மண்ணா மயிர்"

a. மானம் காத்த செயல் b. பணத்தாசை பிடித்த படித்தவர்
c. மயிரிழந்த தலை d. நிலையாமையின் தன்மை

48. “பனைபதித்து உண்ணார் பழம்”

a. காலத்திற்கேற்ப பெறுவது
b. உதவி செய்யும் தன்மை
c. செய்தவன் புகழ்
d. இரகசியம் காத்தல்

அரசு சார்ந்த செய்தி :
திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டு 25 ஆண்டு நிறைவு – வெள்ளி விழா (கேள்வி எண் 49 – 53)

குமரி மாவட்டத்தில் அய்யன் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவு – வெள்ளிவிழா நிகழ்ச்சியை முன்னிட்டு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் தொகுதி – I முதல் அனைத்து போட்டி தேர்வுகளுக்கும் திருக்குறள் 20 அதிகாரத்திலிருந்து 100-க்கு 20 வினாக்கள் போட்டித்தேர்வில் (தமிழ் 100 வினாக்கள்) இடம் பெறுகிறது. இது தொடர்பான வினாடி வினா போட்டித்தேர்வு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்திற்கு தயாராகும் மாணவ / மாணவியர்களை ஊக்கப்படுத்தும் வகையில் அரியலூர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டல் மையத்தில் 10.01.2025 அன்று காலை 10.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

திருக்குறள் வினாடி வினா போட்டி நடைபெறும் இடம் - மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், அரியலூர், நாள். 10.01.2025 (வெள்ளிக்கிழமை) நேரம் காலை 10.00 மணி, இந்த வாய்ப்பினை தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய போட்டித்தேர்வுக்கு தயாராகும் மாணவ மாணவியர்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறும், மேலும் விவரங்களுக்கு XXXXXXXXXX என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளலாம் என அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. XXXX இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட அரசு செய்திகளிலிருந்து கேட்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட வினாக்களுக்கு சரியான பதிலளிக்கவும்.

49. அய்யன் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டு எத்தனையாவது ஆண்டு நிறைவையொட்டி விழா கொண்டாடப்படுகிறது?

a. 25 ஆண்டுகள்
b. 28 ஆண்டுகள்
c. 50 ஆண்டுகள்
d. 100 ஆண்டுகள்

50. நிறைவு விழாவினையொட்டி யாருக்கு போட்டி நடத்தப்படுகின்றது?

a. பள்ளி மாணவர்கள்
b. கல்லூரி மாணவர்கள்
c. அரசு பணிக்கு போட்டியிடுபவர்கள்
d. வேலை தேடுபவர்கள்

51. எந்தத் துறை சார்பாக போட்டியானது நடத்தப்படுகின்றது?

a. வருவாய்துறை
b. சட்டத்துறை
c. மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி துறை
d. கலை மற்றும் பண்பாட்டுத் துறை

52. போட்டி நடைபெறும் நேரம் செய்தியில் என்னவென்று குறிப்பிடப்பட்டுள்ளது?

a. காலை 10.00
b. காலை 11.00
c. காலை 09.00
d. காலை 10.30

53. திருக்குறள் போட்டியில் எத்தனை அதிகாரம் சார்ந்த வினாக்கள் இடம்பெறும் என்று செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது?

a. 133
b. 50
c. 20
d. 100

54. i. Amhydrosis – வியர்விலாமை
ii. Ancestral – தொல்மரபியல்
iii. Anatomy – உடற்கூற்றியல்
iv. Andragen – ஆணிய ஊக்கி நீர்

சரியான இணை எது?
a. i, ii, iv b. ii, iii, iv c. iii, iv d. அனைத்தும்

55. i. Invasion - படையெடுப்பு
ii. Ancestar - மூதாதையர்
iii. Myty - தொன்மம்
iv. Illusion - துன்பம்
சரியான இணை எது?
a. i, ii b. i, ii, iii c. i, iii, iv d. அனைத்தும்

56. i. Fable - நீதிக்கதை
ii. Moralisticism - அறவியல்
iii. Dialectics - முரணியக்கம்
iv. Romanticism - புனைவியல்
சரியான இணை எது?
a. அனைத்தும் b. i, iii, iv c. ii, iv d. i, iv

57. i. Abstract - அருவம்
ii. Theology - இறையியல்
iii. Ballad - கவிதையியல்
iv. Colloguialism - முரண்கருத்து
சரியான இணை எது?
a. i, iiii b. i, ii c. i, iii, iv d. iii, iv

முகப்புச் செய்தி

பி.எஸ்.எல்.வி.சி – 60 ராக்கெட்டின் நான்காம் நிலையில் 24 ஆய்வுகள் கருவிகள் : இஸ்ரோ (கேள்வி எண் 58 – 62)

ஸ்பேடெக்ஸ் திட்டத்துக்காக விண்ணில் செலுத்தப்பட உள்ள பி.எஸ்.எல்.வி. சி – 600 ராக்கெட்டின் நான்காம் நிலையில் (ஸ்டேச் - 4) 24 ஆய்வுக் கருவிகள் இடம்பெற்றுள்ளன என இஸ்ரோ தெரிவித்துள்ளது. அவற்றில் 14 ஆய்வுக் கருவிகள் இஸ்ரோ சார்பில் தயாரிக்கப்பட்டவை என்றும், 10 கருவிகள் கல்வி நிறுவனங்கள், புத்தாக்க நிறுவனங்கள் தயாரித்தவை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ரோபோடிக் செயற்கை நுண்ணறிவு, உயிரி தொழில்நுட்பம் தொடர்பான ஆய்வுகளை அந்த கருவிகள் விண்வெளியில் முன்னெடுக்க உள்ளதாகவும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

“பாரதிய அந்தரிக்ஷா ஸ்டேஷன்” எனும் இந்திய ஆய்வு மையத்தை 2035-க்குள் விண்ணில் நிறுவ இஸ்ரோ திட்டமிட்டுள்ளது. அதற்கான முன்னேற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அதன் ஒரு பகுதியாக ஸ்பேடெக்ஸ் திட்டம் தற்போது செயல்படுத்தப்பட உள்ளது. இந்த திட்டத்தின்படி விண்வெளியில் விண்கலன்களை ஒருங்கிணைக்கும் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இதற்காக தலா 400 கிலோ எடை கொண்ட சேசர் மற்றும் டார்கெட் எனும் 2 விண்கலன்களை இஸ்ரோ வழிகாட்டுதலில் தனியார் நிறுவனம் வடிவமைத்துள்ளது. இந்த இரட்டை விண்கலன்கள் பிஎஸ்எல்வி சி – 60 ராக்கெட் வாயிலாக ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள ஏவுதளத்தில் இருந்து விண்ணில் செலுத்தப்பட உள்ளன.

இந்த விண்கலன்கள் புவியில் இருந்து சுமார் 700 கி.மீ தொலைவில் வெவ்வேறு சுற்றுப்பாதைகளில் நிலைநிறுத்தப்பட உள்ளன. அதன் பின்னர் ஒன்றோடு ஒன்று அவை ஒருங்கிணைக்கப்படும். மனிதர்களை விண்ணுக்கு அனுப்பும்போது ஒரு விண்கலத்திலிருந்து மற்றொன்றுக்கு அவர்கள் மாறுவதற்கும் எரிபொருளை மாற்றிக் கொள்வதற்கும் இந்த தொழில்நுட்பம் பயன்படும். இந்த திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்கும் பட்சத்தில் அமெரிக்காவைப் போன்று விண்வெளியில் இந்தியாவாலும் ஆய்வு மையத்தை அமைக்க

முடியும். அதன்படி அந்த விண்கலன்கள் பெங்களூரில் வடிவமைக்கப்பட்டு, ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிக்கோட்டாவுக்கு விண்ணில் ஏவுவதற்காக அனுப்பப்பட்டுள்ளன. தொடர்ந்து பிஎஸ்எல்வி சி – 60 ராக்கெட்டின் நான்காம் நிலையில் ஆய்வுக் கருவிகளை நிறுவும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

மேற்கண்ட முகப்பு செய்தியிலிருந்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு சரியான பதிலளிக்கவும்.

58. பி.எஸ்.எல்.வி. – 60 ராக்கெட்டின் நான்காம் நிலையில் எத்தனை ஆய்வுக் கருவிகள் உள்ளது?
a. 18 b. 20 c. 24 d. 30

59. பி.எஸ்.எல்.வி – 60 ராக்கெட்டின் நான்காம் நிலையில் உள்ள ஆய்வுக் கருவிகளில் எத்தனை கருவிகள் இஸ்ரோ சார்பில் தயாரிக்கப்பட்டது?
a. 10 b. 12 c. 8 d. 14

60. 'பாரதிய அந்தரிஷா ஸ்டேஷன்' என்ற இந்தியாவின் விண்வெளி ஆய்வு மையம் அமைக்கும் திட்டத்தை எந்த ஆண்டிற்குள் செயல்படுத்த இந்தியா திட்டமிட்டுள்ளது?
a. 2030 b. 2035 c. 2040 d. 2045

61. ஸ்பேடெக்ஸ் திட்டத்திற்காக தனியார் நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட சேசர் மற்றும் டார்கெட் எனும் 2 விண்கலன்களின் எடை எவ்வளவு?
a. 300 கிலோ b. 450 கிலோ c. 400 கிலோ d. 350 கிலோ

62. ஸ்ரீஹரிகோட்டா ராக்கெட் ஏவுதளம் எந்த மாநிலத்தில் உள்ளது?
a. தமிழ்நாடு b. ஆந்திரா c. மகாராஷ்டிரா d. கேரளா

பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி: (கேள்வி எண் 63 – 67)

ஆசியாவிலேயே மிகப் பழமையான நூலகம் என்ற புகழுக்குரியது தஞ்சை சரசுவதி மகால் நூலகம். இந்திய மொழிகள் அனைத்திலும் உள்ள ஓலைச்சுவடிகள் இங்குப் பாதுகாக்கப்படுகின்றன. உலகளவில் தமிழ் நூல்கள் அதிகமுள்ள நூலகம் கன்னிமாரா நூலகமே, இது சென்னை எழும்பூரில் அமைந்துள்ளது. இந்தியாவில் தொடங்கப்பட்ட முதல் பொது நூலகம் என்ற பெருமைக்கு உரியது திருவனந்தபுரம் நடுவண் நூலகம். கொல்கத்தாவில் 1836-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு 1953-இல் பொதுமக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட தேசிய நூலகமே இந்தியாவின் மிகப்பெரிய நூலகமாகும். இது ஆவணக்காப்பக நூலகமாகவும் திகழ்கிறது. உலகின் மிகப்பெரிய நூலகம் என்ற பெருமையைத் தாங்கி நிற்பது அமெரிக்காவிலுள்ள லைப்ரரி ஆப் காங்கிரஸ்.

63. இந்தியாவில் தொடங்கப்பட்ட முதல் பொது நூலகம் எது?
a. கன்னிமாரா நூலகம் b. சரசுவதி மகால் நூலகம்
c. திருவனந்தபுரம் நடுவண் நூலகம் d. அண்ணா நூற்றாண்டு நூலகம்

64. உலகின் மிகப்பெரிய நூலகம் எது?
a. அமெரிக்கா – லைப்ரரி ஆப் காங்கிரஸ்
b. சரசுவதி மகால் நூலகம்
c. கன்னிமாரா நூலகம்
d. இங்கிலாந்து – ஆக்ஸ்போர்டு நூலகம்

65. ஆசியாவின் மிகப் பழமையான நூலகம்
a. கன்னிமாரா நூலகம் b. தில்லி தேசிய நூலகம்
c. சரஸ்வதி மகால் நூலகம் d. பம்பாய் அம்பேத்கர் நூலகம்

66. கன்னிமாரா நூலகம் சென்னை ____________ அமைந்துள்ளது.
a. எழும்பூரில் b. அம்பத்தூரில் c. கோட்டூர்புரத்தில் d. அண்ணா சாலையில்

67. உலகளவில் தமிழ்நூல்கள் அதிகமுள்ள நூலகம் எது?
a. தஞ்சை சரஸ்வதி மகால் நூலகம் b. கன்னிமாரா நூலகம்
c. மதுரை ஓலைச்சுவடி நூலகம் d. ஜி.யு. போப் நூலகம்

68. தவறாகப் பொருந்தியுள்ளதைக் கண்டறிக.
a. பேனா - தூவல்
b. சன்னல் - நெடும்பேழை
c. ரப்பர் - தேய்ப்பம்
